Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | கார்த்திகை-30 | 15-12-2004 | புதன்கிழமை | ஓசை -301



ஆற்றலரசி நகைப் பூங்கா

உங்கள் எண்ணங்களை
தங்க நகைகளாக்கி
அழகுக்கு மேல் அழகு சேர்க்கும்
ஆபரணங்களை ஓடர் மூலம்
குறித்த தவணையில் செய்து
பெற்றுக் கொள்ள

ஆற்றலரசி நகைப் பூங்கா

உங்களின் ஆதரவே
எங்களின் வளர்ச்சி

உரிமையாளர்:- இ. புவிகரன்

நீதிமன்று முன்பாக,
யாழ்சாலை, கிளிநொச்சி.

(சி-11033)




# ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினரை

# சபாநாயகராகத் தெரிவு செய்ய ஐ.தே.க முடிவு!

## ஆளும் கட்சியின் திட்டத்தை முறியடிக்க நடவடிக்கை

(கொழும்பு)

**பாராளுமன்றத்தின் சபாநாயகராக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வாய்ப்பு வழங்க ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டுள்ளதாகத் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. தற்போதைய சபாநாயகர் லொக்கு பண்டாரவை நீக்க ஆளும் கட்சி எடுத்து வரும் முயற்சியை முறியடிக்கவே இவ்வாறு திட்மிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

ஆரம்ப முதலே சபாநாயகர் பதவியிலிருந்து லொக்கு பண்டாரவை நீக்கிவிடும் முயற்சியில் ஈடுபட்டுவரும் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியினர் அண்மையில் பாராளுமன்றத்தில் இடம் பெற்ற அமளிதுமளியைக் கட்டுப் படுத்தத் தவறிவிட்டார் எனக் குற்றம் சாட்டி அவரை பதவியிலிருந்து நீக்க முயன்றமை தெரிந்ததே. பாராளுமன்றத்தில் சபாநாயகரை நீக்கிவிடத்தேவையான பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டுள்ளதாகக் கருதும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நம்பிக்கையில்லாப் பிரேரனை கொண்டு வந்து நீக்கி ஐ.ம.சு. முன்னணி உறுப்பினரை நியமிக்க முன்னர் ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த ஒரு

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் சில சந்திப்புக்களின் பின் எரிக் சூல்கெய்ம் இன்று வன்னிவருகிறார்

(கொழும்பு)

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்கெய்ம் இன்று வன்னிக்கு வருகை தருகிறார். அவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்திக்கவுள்ளார். நேற்று முன்தினம் இலங்கை வந்த அவர் நேற்றுக்காலை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை சந்தித்து உரையாடினார். இதனையடுத்து அரசாங்க சமாதான செயலக செயலர் ஜயந்ததனபாலவை அவர் சந்தித்தார். நேற்று இரவு அவர் பொதுமக்கள் பிரதிநிதிகளை

(12ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப் பற்றில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் அக்கரைப் பற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார். 28 வயதுடைய சிவகுரு உதயகுமார் என்ற இளைஞரே அவரது வீட்டில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இரவு 8.30 மணியளவில் ஆலையடி வேம்பிலுள்ள அவரது வீட்டிற்குச் சென்ற இளைஞரொருவர் அவரை அழைத்து கைத்துப்பாக்கியினால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளார். காயமடைந்த நிலையில் கல்முனை தெற்கு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானார். இந்தக் கொலையுடன் தொடர்புடைய துப்பாக்கிதாரி அடையாளம் காணப்படவில்லை என அக்கரைப்பற்று பொலிசார் தெரிவித்தனர்.

## உலங்குவானூர்திப் பயண விவகாரம் சமாதான முயற்சிகளைப் பாதிக்காதாம்!

### விமானப் படைத் தளபதி கூறுகின்றார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கான போக்குவரத்திற்கு விமானப்படைக்கு சொந்தமான உலங்குவானூர்திகளை இனிமேல் பயன்படுத்த அனுமதிப்பதில்லை என விமானப் படை எடுத்துள்ள முடிவு சமாதான நடவடிக்கைகளுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தமாட்டாது என விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்சல் டொனால்ட் பெரேரா தெரிவித்துள்ளார். விமானப் படையின் இந்த தீர்மானமானது சமாதான நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் எனப் பல்வேறு தரப்பினராலும் அச்சம் வெளியிடப் பட்டுள்ள சூழ்நிலையில் இப்படியான கருத்தொன்றை அவர் வெளியிட்டுள்ளார்.

நோர்வே சமாதானத் தூதுவரின் போக்குவரத்து நடைமுறைகள் மட்டுமே இந்தத்தீர்மானம் காரணமாக மாற்றப்பட்டுள்ளது. போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவுடன் பேசியே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் பறக்கும், தரையிறங்கும் விமானங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாத நிலையில் தமது உலங்கு வானூர்திகளை பயன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவ செயலணிக்குழு அமைப்பு

வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி வழங்குவதற்கான செயலணிக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

நேற்று அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களும், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களும் ஒன்று கூடி அண்மைக்காலமாக பெய்து வரும் கடும் மழையினாலும், வெள்ளப் பெருக்கினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவதற்கான திட்டங்கள் பற்றி அவசரக் கலந்துரையாடல் ஒன்றை நடாத்தின.

தமிழீழத் திட்டமிடல் செயலகத்தில் பிற்பகல் நான்கு மணியளவில் நடைபெற்ற இவ் ஒன்று கூடலில் பதினைந்திற்கும் மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் கலந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுப் பயிற்சியில் கலந்து கொள்ள 3 இந்தியக் கப்பல்கள் வந்தடைந்தன

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படையினருக்கு கடற்பயிற்சி வழங்குவதற்காக இந்திய கரையோர காவல்படையின் மூன்று கப்பல்களும் ஒரு உலங்குவானூர்தியும் நேற்று சிறிலங்கா கடற்படை தலைமையகத்தை வந்தடைந்துள்ளன.

சிறிலங்கா - இந்திய ஒருங்கிணைந்த கடற்பயிற்சித் திட்டத்தின் கீழ் இந்தப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. சாரங்கா, துர்க்காபாய் மற்றும் தேஸ்முக் ஆகிய கரையோர காவல்படை கப்பல்களே இந்தப் பயிற்சிக்காக கொழும்பு சென்றடைந்துள்ளன. எதிர்வரும் 16ஆம் திகதி வியாழக்கிழமை பயிற்சி ஆரம்பமாகவுள்ளது. சிறிலங்கா கடற்படைக்கு சொந்தமான 5 கப்பல்கள் இந்த பயிற்சியில் ஈடுபடவுள்ளன. கொழும்பு துறைமுகத்தை அண்மித்த பகுதியிலேயே இந்தப் பயிற்சி வழங்கப்படும் எனச் சிறிலங்கா கடற்படை பேச்சாளர் கப்டன் ஜயந்த பெரேரா இதுபற்றி தெரிவித்தார்.

# தொடரும் கனமழை காரணமாக பெருமளவு மக்கள் இடம்பெயர்வு!

## வீடுகளுக்குள் வெள்ளம், வீதிகள் பாதிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கடந்த இரு தினங்களுக்கும் மேலாக தொடரும் மழையினால் மேலும் அதிகளவு மக்கள் பாதிப்படைந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து சேதங்களை விளைவித்துள்ளதுடன் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் போக்குவரத்தும் பாதிப்பு அடைந்துள்ளது.

கடந்த இரண்டு நாட்களாக பெய்துவரும் பெருமழை காரணமாக பரந்தன் - புதுக்குடியிருப்பு வீதியூடான போக்குவரத்து நெருக்கடி நிலையை அடைந்துள்ளது.

பரந்தன் புதுக்குடியிருப்பு வீதியில் 10இற்கும் மேற்பட்ட இடங்களில் மழை வெள்ளம் பாய்ந்து கொண்டிருக்கிறது. கண்டாவளைப் பாலத்துக்கும், புளியம்பொக்கணைச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதிகளில் புனரமைக்கப்பட்டு வந்த இரண்டு பாலங்களுக்குப் பதிலாக அமைக்கப் [illegible]டிருந்த தற்காலிக பாலங்கள் அனைத்தும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப் பட்டுள்ளது. இதனால், அதனூடான போக்குவரத்து துண்டிக்கப் பட்டது. இதனை அடுத்து புனரமைப்பு வேலைகள் முழுமையாக நிறைவடையாமலேயே போக்குவரத்துக்காக அப்பாலங்கள் இரண்டும் திறந்துவிடப்பட்டுள்ளன.

இதேவேளை, புளியம்பொக்கணைச் சந்திக்கு அருகில் உள்ள கோஸ்வே ஊடாக பெருமளவான வெள்ள நீர் வீதியை குறுக்கறுத்துப் பாய்ந்து கொண்டிருக்கிறது. இதனால், மேற்படி கோஸ்வே பாலம் சேதமடைந்துள்ளதுடன் வாகனங்கள் போக்குவரத்துச் செ[illegible]வதும் தடை செய்யப்பட்டுள்ளது.இந்நிலையில், கோஸ்வேயைக் கடந்து செல்வதற்கு முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தால் இரண்டு படகுகள் மூலம் மக்கள் ஏற்றி இறக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட கொழும்புத்துறை பகுதியில் உள்ள இராணுவக் காவலரணில் கடைமையாற்றி வந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துள்ளார். உயிர் இழந்தவர் இலங்கை இராணுவத்தின் 56ஆவது படைப் பிரிவைச் சேர்ந்த சிப்பாயான அஜந்த பண்டார (வயது 21) என அடையாளம் காணப்பட்ள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)



பன்னங்கண்டிப்பகுதியில் வெள்ளத்தில் மூழ்கியுள்ளகுடிசை,



வெள்ளத்தால் சூழப்பட்டு குடிசையில் சிக்கியிருப்போரும் மீட்கச் சென்றோரும்



உடைப்பெடுத்துள்ள கறுப்பிகுளம் (படங்கள் -ரூபன்)



கண்டாவளைப்பகுதியில் இடம்பெயர்ந்துள்ள மக்கள்



தற்காலிகப்பாலம் வெள்ளத்தால் அள்ளுப்பட்டது



படங்கள் லோகீசன் பிரதீபன்

.புளியம்பொக்கணைச் சந்திப்பகுதி கோஸ்வேயை படகு மூலம் கடக்கும் மக்கள்.



அக்கராயன் பகுதியில் படகுமூலம் வெள்ளத்தை கடக்கும் மக்கள்,



..ரிப்பு -கிளிநொச்சி வீதியில் ...



வெள்ளத்தில் மூழ்கியுள்ள வயல் (படங்கள் -சோதி)

# துயர் பகிர்கிறோம்

மண்ணில்

1978

03

22



மனங்களில்

2004

12

13

நண்பனே இரகு
சிலந்திவலை பின்னிய
பாழடைந்த வீடாய்
சிதைந்து கிடக்கிறது-பழகித்திரிந்த
பழைய நாள்கள்
எந்த விசங்களாலும்
கொல்ல முடியவில்லை-அந்த
நினைவுகளை

நிலையில்லா நீர்க்குமிழ்களை
ஒன்றாகச் சேர்த்து
முத்தாரஞ் செய்யும்-அந்த
முயற்சியின் முனைப்பில்
தனிமகுடமொன்று -உனக்கு
எப்போதுமுண்டு

மீசைவைத்த குழந்தையாய் -உன்
குறும்புகள், உயர்ந்த உன்
ஆளுமையை வெளிக்காட்டின.

கார்த்திகையில் மனவாழ்வில்
நுழைந்து
முப்பத்து மூன்று நாளில்
மண் வாழ்வைப் பிரிந்தாய்

எவ்வளவு காலம் வாழ்ந்தோம்
என்பதிலும்
எவ்வாறு வாழ்ந்தோம் என்பதே
உன் வாழ்க்கையாய்
பொருள்படுகிறது.

நீ வருவாயென எதிர்பார்க்கிறோம்
இரகு வந்துவிடு.

கொல்லங்கலட்டி, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும்
வள்ளிபுனம், புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் சாம்பசிவம் இரகுலதரன் (இரகு)

ஆளுகை அலுவலர், வருவாய்ப்பகுதி, வவுனியா மாவட்டம்.

**பணிப்பாளர்,**
**போராளிகள், பணியாளர்கள்,**
**வருவாய்ப்பகுதி,**
**நிதித்துறை**

(5405)

# முன்னாள் உப சனாதிபதி, துணைப் பிரதமர் உள்ளிட்ட பலர் ஈராக் சிறையில் உண்ணாவிரதம்

(பாக்தாத்)

**அமெரிக்க இராணுவத்தால் கைது செய்யப்பட்ட ஈராக்கின் முன்னாள் உப சனாதிபதி மற்றும் துணைப்பிரதமர் உள்ளிட்ட சதாம் ஹுசைனின் ஆதரவாளர்கள் பலர் சிறையில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.**

சதாம் உள்ளிட்ட அவரின் உயர்மட்ட அதிகாரிகள் சுமார்55 பேர் எந்தவொரு வழக்கு விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.தற்போது உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் முன்னாள் துணைப்பிரதமர் தாருக் அஸீஸ் உபசனாதிபதி ஜாசின் ரமதான் ஆகியோரும் உள்ளனர் ஆயினும் சாதாம் ஹுசைன் இதில் ஈடுபடவில்லையென்று அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

சதாம்ஹுசைனின் ஆதரவாளர்கள் சிறையில்'உண்ணாவிரதப் போராட்டம் நடத்துகின்றனரா' என்று அமெரிக்க இராணுவ அதிகாரிகளிடம் கேட்டதற்கு 'என்ன வேண்டுமானாலும் செய்யட்டும். அவர்களின் உடல் நிலை பற்றி எங்களுக்குக் கவலையில்லை' என்று தெரிவித்தனர். சிறையில் தங்களைச் சட்டவிரோதமாக அடைத்துவைத்திருப்பதை எதிர்த்து, உண்ணாவிரதம் இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சதாமும்,அவருடைய மாஜிக்களும் அமெரிக்க இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டிருந்தாலும், சட்டப்படி அவர்கள் ஈராக் இடைக்கால ஆட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கின்றனர். ஈராக்கில் அடுத்த மாதம் பொதுத் தேர்தல் நடக்கிறது. அதில் வெற்றி பெற்று ஆட்சி அமைப்பவர்களிடம் தாங்கள் ஒப்படைக்கப்படுவோம் என்று இவர்கள் கருதுகின்றனர். ஆனாலும் சதாம் உட்பட மாஜிக்கள் யாரும் இதை விரும்பவில்லை.

அமெரிக்கா ஈராக்கின் நிலமையைப்புறக்கணித்து வருமாயின் மிக விரைவில் ஈராக்கிலும் புதிய கிட்லர் ஒருவர் உருவாகமுடியும். என்று அந்நாட்டு சனாதிபதி காசி அல் ஜாவா எச்சரிக்கை விடுத்துள்ளது தெரிந்ததே.



பாக்தாத்தில் தற்கொலைத்தாக்குதல் இடம்பெற்ற இடத்திற்குள் பொதுமக்கள் செல்வதைத் தடைசெய்து காவல் நிற்கும் அமெரிக்கப் படையினர்.



மத்திய சீனாவில் சுரங்கத்தில் இடம்பெற்ற வெடி விபத்தில் உயிரிழந்த பணியாளர் ஒருவரின் உடலை மீட்டுவரும் மீட்புப் பணியாளர் இந்த விபத்தில் 148 பேர் உயிரிழந்தும் 36 பேர் காணாமல் போனதும் தெரிந்ததே.

# சதாம் கைதாகி ஒருவருடம் பூர்த்தியான நாளன்று குண்டு வெடித்து 13 பேர் பலி 19 பேர்காயம்

(பாக்தாத்)

ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைனை அமெரிக்க இராணுவம் கைது செய்து ஒரு வருடம் பூர்த்தியடைந்தநாளான நேற்று முன் தினம் பாக்தாத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 13 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 19 பேர் காயமடைந்துள்ளனர்.

ஈராக்கை அமெரிக்க தலைமையிலான பன்னாட்டு படையினர் கைப்பற்றியதையடுத்து பின் வாங்கிச்சென்ற ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைனின் ஆதரவாளர்கள் மறைந்திருந்து அமெரிக்க மற்றும் பன்னாட்டுப் படையினர் மீது தொடர்தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இத்தாக்குல்களில் கணிசமானவை தற்கொலைத் தாக்குதல்களாக இருப்பதால் அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படையினர் அவற்றைத்தடுப்பதில் பெரும் சவால்களிற்கு முகம் கொடுக்க நேரிட்டடுள்ளது. அத்துடன் நாளாந்தம் இழப்புக்களையும் சந்தித்து வருகின்றனர்.கடந்த டிசம்பர் மாதம் 13ஆம் திகதி சதாம்ஹுசைன் திக்ரித் அருகே பாதாள அறையில் பதுங்கியிருந்த போது அமெரிக்க இராணுவத்தால் பிடிக்கப்பட்டார்.

இவர் தற்போது அமெரிக்க இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பாக்தாத்சிறையில்அடைக்கப்பட்டுள்ளார்.

# கிளர்ச்சியாளர்களைக் கட்டுப்படுத்த பலஸ்தீன தலைவர்களால் முடியுமா

## இஸ்ரேலிய பிரதமர் கேள்வி

(ஜெருசலேம்)

பலஸ்தீனத் தலைவர்கள் கிளர்ச்சியாளர்களைக் கட்டுப்படுத்த முடியுமா என இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் கேள்வி எழுப்பியுள்ளார். இதில் தான் சமாதானப் பேச்சுக்கள் தங்கியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.கடந்த ஞாயிற்றுக்கிழமை காஸாப் பள்ளத்தாக்கில் நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து அவரது கருத்துக்கள் வெளியாகியிருக் கின்றன. இந்தத் தாக்குதலில் ஐந்து இஸ்ரேலியப் படை வீரர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

யசீர் அரபாத்தின் மறைவிற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் மிகவும் மோசமான தாக்குதலாக இத் தாக்குதல் அமைந்திருக்கிறது. இந்தத் தாக்குதலைத் தொடர் ந்து இஸ்ரேலியப் படைகள் ஏவுகணைகள் மூலம் பதிலடி கொடுத்திருக்கின்றார்கள். இதன் காரணமாக அரபாத்தின் மறைவிற்குப் பின்னர் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற நம்பிக்கையும் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.



எகிப்திற்கும் காசாவிற்கு மிடையிலான எல்லைப் பகுதியிலமைந்துள்ள இஸ்ரேலிய இராணுவ காவல் நிலைக்கு முன்னால் சிப்பாய் ஒருவர்.

# இந்தோனேஷிய முன்னாள் அதிபரின் மகளிடம் ஆயுதபேர ஊழல் குறித்து விசாரணை

(ஜகார்த்தா)

பிரிட்டனுடனான ஆயுத பேரம் குறித்து இந்தோனேஷியா முன்னாள் அதிபர் சுகார்த்தோவின் மூத்த மகள் ருக்மானாவிடம் ஊழல் ஒழிப்பு அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

ஸ்கார்பியன் பீரங்கிகளை விற்பதற்காக ருக்மானாவுக்கு பிட்டன் நிறுவனம் ரூ.138 கோடியை லஞ்சமாக அளித்ததாக டெலிகிராப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது இதைத் தொடர்ந்து அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ருக்மானாவின் வழக்கறிஞர் அமீர் ஷ்யாம்சுதின் இவ்வழக்கு தொடர்பாக இதுவரை ருக்மானாவிடம் ஆலோசிக்கவில்லை எனத் தெரிவித்தார். ருக்மானா மீதான புகாரை அவரது தோழிகள் மறுத்துள்ளனர்.



திபெத்தின் புத்த மதத்தலைவர் தலாய்லாமா இந்தியாவின் கர்நாடக மாநிலம் பைல குட்பா வந்தார். அங்கு அவரை திபெத்தை சேர்ந்த பள்ளிக் கூட மாணவ-மாணவிகள் சந்தித்தனர்.

# முகமூடிகள் விற்பனை அமோகம்

தாய்லாந்து சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை முகமூடி அணிந்து விளையாடுவதில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள், சிங்கம், புலி, பூனை, முயல் போன்ற விலங்குகளின் முகமூடிகள் மட்டுமின்றி பிரபல அரசியல் தலைவர்களின் முகமூடிகளும் அதிகளவில் விற்பனை ஆகின்றன. ஒரு முகமூடி100 பாத்வரை விற்கப்படுகிறது.

# பிரிட்டனில் 5 இலட்சம் பேருக்கு வீடில்லை எதிர்க் கட்சிகள் பிரதமர் மீது குற்றச்சாட்டு

(லண்டன்)

பிரிட்டனில் 5 இலட்சம் பேருக்கு மேல் சொந்தவீடு இல்லாமல் இருக் கிறார்கள். வாடகை கூட கொடுக்க முடியாத நிலையில் இருப்பவர்கள் அப்படி ஒரு லட்சம் பேர் தான் இருக்கிறார்கள் என்று அரசு கூறு கிறது.

5 இலட்சம் பேர் என்று தன்னார்வத்தொண்டு நிறுவனம் தெரிவிக்கிறது. பிளாட்பாரங்கள், விடுதிகள் ஆள் அரவமற்ற பகுதிகள் ஆகியவற்றில் இவர்கள் பிளாஸ்டிக், தகர வீடுகளில் வசிக்கின்றனர். மழை, குளிர் வந்தால் இவர்கள் பாடு திண்டாட்டம் தான். டோனி பிளேர் தலைமையில் தொழிலாளர் கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு நிலமை மோசமாகி விட்டது. என்று எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளன.

# மலேசியாவில் வெள்ளப்பெருக்கு 9பேர் பலி, 4பேரைக் காணவில்லை

மலேசியாவின் கிழக்குக் கரையோரப் பகுதியில் அடைமழையினைத் தொடர்ந்து ஏற்பட்ட பெருவெள்ளம் 9பேரைப் பலி கொண்டிருக்கின்றது.

15 ஆண்டுகளுக்கு பின்னர் ஏற்படும் மிகவும் மோசமான இந்த இயற்கை அனர்த்தம் காரணமாக 12 ஆயிரம் பேர் தமது குடியிருப்புக்களை விட்டு வெளியேறியிருக்கின்றார்கள் என உள்ளூர் ஊடகங்கள் அறிவித்துள்ளன.

மலேசியாவின் 3 மாநிலங்களின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியிருக்கின்றன. இதன்போது 4பேர் காணாமல் போயுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

### வன்னிப் பிரதேசத்தில் பலபாகங்களிலும்

# தொடரும் கனமழையில் மக்கள் இடப்பெயர்வு

# பெரும் போக நெற்செய்கை நீரில் மூழ்கியது

**வன்னிப் பிரதேசத்தின் பல பாகங்களிலும் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் கடும் மழையினால் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததாலும் சுவர்கள் இடிந்து வீழ்ந்ததாலும் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அத்துடன் பெரும்போக நெற்செய்கையும் அழிவுக்குள்ளாகியுள்ளது.**

தொடரும் மழை காரணமாக பாதிப்புக்குள்ளாகும் மக்கள் தொகை அதிகரித்து வருகின்றது.

நேற்று முன்தினம் பெய்த கடும் மழையினால் பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்த போதிலும் சரியான விபரங்கள் இதுவரை கிடைக்க வில்லை.

முள்ளியவளை தண்ணீருற்று வற்றாப்பளை பகுதிகளில் மக்கள் குடியிருப்புக்கள் பல அண்மையில் பெய்த கன மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளடன் முள்ளியவளை பிரதேச கமநல அபிவிருத்தி சேவைத் திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்ட காலபோக பயிர்செய்கையுமன் பாதிக்கப்பட்டு அழிவுக்குள்ளாகியுள்ளது..

பூநகரியில் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் பெருமழை காரணமாக நெற்புலவு, கரிக்கட்டுக் குளம், மட்டுவில் நாடு மேற்கு போன்ற பிரதேச மக்களில் நூற்றுக் கணக்கானோர் இடம் பெயர்ந்து மட்டுவில் நாடு அ.த.க பாடசாலையில் தங்கியுள்ளனர். அதே போல் வெட்டுக்காடு பரமன் கிராய், வில்லடி, செம்மன்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மக்கள் பரமன் கிராய் அ.த.க பாடசாலைக்கு இடம் பெயர்ந்துள்ளனர். இவர்களிற்கு தேவையான உணவுப் பொருட்களை பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகம் பல சிரமங்களில் மத்தியிலும் கொடுத்து வருகின்றது. இவ்வாறு பாடசாலையில் தஞ்சம் புகுந்துள்ள மக்களை பிரதேச செயலர் மா.சிறீஸ் கந்தகுமார், நிர்வாக உத்தியோகத்தர் இராசன் ஆகியோர் பார்வையிட்டு அவர்களுக்குரிய அத்தியாவசிய தேவைகளை நிறை வேற்றுவதற்கு ஆவண செய்கின்றனர்.

இவ் இடம்பெயர் மக்களின் நன்மை கருதி இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் பூநகரிக் கிளையின் ஊடாக மக்கள் தஞ்சம் புகுந்துள்ள பாடசாலைகளான கறுக்காய்தீவு ம.வி, ஞானிமடம் அ.த.க பாடசாலை செட்டியாக்குறிச்சி முன்பள்ளியில் உள்ள மக்களுக்கு வைத்திய சேவைகளையும் வழங்கியுள்ளது.

பெய்துவரும் கடும் மழையினால் வட்டக்கச்சிப் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டு வருகின்றது.

வட்டக்கச்சிப் பகு[illegible]யில் குடலைப் பருவமும் தற்டே[illegible] விதைப்பினையும் மேற்கொள்[illegible]ம் பருவத்தில் உள்ள காணிக[illegible]ம் அதிக அளவு நீர்பாய்வதனா[illegible] 500 ஏக்கருக்கு மேற்பட்ட பயிர்நிலங்கள் நீரில் மூழ்கி உள்ளது. மற்றும் தற்போது நாற்று நடப்பட்டட வயல் நிலங்களில் உள்ள நாற்றுக்கள் வீதிகளிலும் குளங்களிலும் காணக் கூடியதாக உள்ளதும் வட்டக்கச்சிப் பகுதியில் 08 இற்கும் மேற்பட்ட குளங்கள் காணப்படுவதனால் குளங்களில் நீர்மட்டம் உயர்வ[illegible] தால் அதிக அளவு பயிர்நிலங்களை குளத்து நீர் முடியுள்ளது. மற்றும் பயிர்களுக்கு அந்த நேரத்திற்கு அடிக்கப்படும் மருந்துகள், வயதுக்கேற்ப போடப்படும் (உரம்) பசளை என்பன பயிர் நிலங்களுக்கு போட முடியாத அவல நிலைமையும் தொடர்ந்து ஏற்பட்டு வருகின்றது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளாவன. பெரியகுளம், இராமநாதபுரம், சிவிச்சென்றர் பன்னங்கண்டி, 10 வீட்டுத்திட்டம், ஆறுமுகம் வீதி ஆகியனவே அதிக சேதத்துக்குள்ளாகியது குறிப்பிடத்தக்கது. (12)

# தச்சடம்பன் குளம் உடைப்பெடுக்கும் அபாயம்

(முள்ளியவளை)

ஒலுமடு கமநலசேவை அபிவிருத்தி திணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்ட தச்சடம்பன்குளம் உடைப்பெடுக்கும் அபாய நிலையில் உள்ளதாக கமநல சேவை அபிவிருத்தி திணைக்களப் பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளர்.

மேற்படி பகுதி தச்சடம்பன் குளத்தின் கீழ் 238 ஏக்கர் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் குளத்தின் துருசுப் பகுதியில் பாரிய உமை ஏற்பட்டு இரண்டு தடவைகள் விவசாயிகளினால் மண் மூடைகளால் அடைக்கப்பட்ட போதும் மீண்டும் உமை உடைப்பெடுத் துள்ளது. இதனால் 12 அடி நீர் கொள்ளளவு செய்யக்கூடிய குளத்தில் தற்போது 9 அடி நீர் மறிக்கப்பட்டுள்ளது.

மழை தொடருமானால் நீர் மட்டம் உயர மேற்படி குளத்தின் உமைப் பகுதி உடைப்பெடுக்கும் அபாய நிலையில் உள்ளது.

இக்குளம் உடைப்பெடுக்குமானால் 234 ஏக்கர் நெற்செய்கையும் முற்றாக அழிந்து போகும் பரிதாப நிலை உருவாகும் என கமநல சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி. சு.இராசலட்சுமி தெரிவித்துள்ளார்.மேற்படி பகுதி கமநல சேவை அபிவிருத்தி திணைக்களத்தின் முனபாக சுமார்200 அடி தூரத்திலேயே அக்குளம் அமைந்துள்ளது.

1997 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது அப்பகுதி இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு கமநல சேவை திணைக்களத்தை தமது பாரிய படைத்தளமாக இராணுவம் அமைதது படைத்தளத்தின் பாதுகாப்பு அரனாக மேற்படி குளக்கட்மல் பாரிய பதுங்குகுழிகள், காப்பரண்கள் அமைக் கப்பட்டு இருந்தது. எனினும் மேற்படி குளப் புனரமைப்பு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவில்லைஎன்பது குறிப்[illegible]டத்தக்கது .(ஆ)

# இன்றைய அரசியல் சூழ்நிலை குறித்து துணுக்காயில் கருத்தூட்டல் நிகழ்வு

துணுக்காய்ப் பிரதேசத்தில் இன்றைய அரசியல் சூழ்நிலை சம்பந்தமான கருத்தூட்டல் நிகழ்வு அனிஞ்சியன் குளம் அ.த.க பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை 9.30 மணியளவில் முல்லை.மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சின்னண்ணன் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் கருத்துரைகளை முல்லை. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் அ.தனிநாயகம் நிகழ்த்த, சிறப்புரையை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் நிகழ்த்தினார். நிகழ்வில் வர்த்தகசங்கப் பிரதி நிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள்,பொதுமக்கள், போராளிகள், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் என 300 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (24)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான 16 நாட்கள் பயிற்சி வகுப்பு

(முள்ளியவளை)

இலங்கையின் சிறுவர் பாதுகாப்பு நிறுவனமும் தமிழர் புனர் வாழ்வுக்கழமும் இணைந்து வடக்கு கிழக்கு மாகாண முன் பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் ஊடாக நடாத்தப்படும் முள்ளி யவளைப பிரதேச முன்பள்ளி ஆசி ரியர்களுக்கான 16 நாள் பயிற்சி ஆரம்ப நிகழ்வு முள்ளியவளை தண்ணீரூற்று மேற்கு சிவாநந்தி முன் பள்ளி மண்டபத்தில் கடந்த 3 ஆம் திகதி முப 1030 மணிக்கு முள ளிய வளைப் பிரதேச முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் செல்வி. கு.பிரதீஸ்வரி தலைமையில் ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை முள்ளியவளைப் பிரதேச செய்தியாளர் நா. பார்த்தீபன், முள்ளியவளைதெற்கு கிராம அலுவலர் குலேந்திரன் ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை முள்ளியவளைப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.நாகமைந்தன் ஏற்றி வைத்ததையடுத்து தமிழர் புனர் வாழ்வுக் கழகக்கொடியினை முல்லை.வலய முன்பள்ளி கல்வி மேம் பாட்டு நிறுவன இணைப் பாளர் திருமதி.து.கலைவாணி ஏற்றி வைத்தார்

மண்டப நிகழ்வில் வரவேற்புரையினை முல்லை அகதிகள் புனர்வாழ்வுக்கழக சமூக நலத் திட்ட இணைப்பாளர் திருமதி. வி.லங்காதேவி நிகழ்த்த, முள்ளியவளை தெற்கு கிராமஅலுவலரின் ஆசியுரை இடம் பெற்றது. கருத்துரைகளை முல்லை.பொருளாதார அபிவிருத்தி நிறுவன அலுவலக உத்தியோகத்தர் கணேசமூர்த்தி, முள்ளியவளை தெற்கு கிராம அலுவலர், முள்ளியவளை வடக்கு கிராம அலுவலர் மோகன் ராஜ், முல்லை வலய முன்பள்ளி கல்வி மேம் பாட்டு நிறுவன இணைப் பாளர் திருமதி.து.கலைவாணி ஆகியோர் நிகழ்த்தியதையடுத்து சிறப்புக்கருத்துரையினை தமிழீழ விடுதலைப்புலிகளின் முள்ளியவளை பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.நாகமைந்தன் நிகழ்த்தினார். (ஆ)

# முல்லை நியாப்II திட்டத்தில் 25 கிராமங்கள் தெரிவு

முல்லை மாவட்டத்தில் நியாப் II வேலைத் திட்டத்தில் 25 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதில் கரைதுறைப் பற்றில் ஆறுமுகத்தான்குளம், புதறிகுடா, முறிப்பு, முள்ளியவளை கிழக்கு ஆகிய கிராமங்களும் ஒட்டுசுட்டானில் பனிக்கன் குளம், நீதிபுரம், பழம்பாசி, சின்னச்சாளம்பன், தண்டுவான், புலிமச்சிநாதகுளம், கற்குவாரி, பெரியஇத்திமடு, சிவநகர், திருமுறிகண்டி, கரிப்பட்ட முறிப்பு ஆகிய கிராமங்களும், புதுக்குடியிருப்பில் தேவிபுரம், இளங்கோபுரம், குரங்கிருப்பான், மந்துவில் ஆகிய கிராமங்களும், மாந்தை கிழக்கில் அம்பாள்புரம், வன்னிவிழாங்குளம், நட்டாங்குளம் ஆகிய கிராமங்களும்,

துணுக்காயில் ஆளங்குளம், உயிலங்ளம், அனிஞ்சியன்குளம், ஆகிய கிராமங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கச்சேரி உதவி அரச அதிபர் தலைமைப் பீட அதிகாரி செல்வி ப.ஆரணி தெரிவித்தர்.(20)



அம்பாறையில்



மட்டக்களப்பில்

# கிழக்கில் தொடர் மழை வெள்ளத்தினால் 90 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு

கிழக்கு மாகாணத்தில் கடந்த இரு நாட்களாக பெய்து வரும் அடை மழையினால் தொண்ணூறாயிரம் குடும்பங்கள் பாதிப்புக் குள்ளாகியுள்ளன. இக்குடும்பங்களில் சுமார் 5000 குடும்பங்கள் தங்கள் நண்பர்களின் வீடுகளிலும், பாடசாலைகள், ஆலயங்கள் உட்படப் பல பொது இடங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். இதனால் க.பொ.த.சாதாரண பரீட்சை எழுதும் மாணவர்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக மட்டக்களப்பு அரசாங்க அதிபரும், மாவட்டச் செயலாளருமான வேல்முருகு சண்முகம் தெரிவிக்கையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் சுமார் 3000 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன என்றார்.

வெல்லாவெளி, பட்டிருப்பு, கிரான் ஆகிய பிரதேசங்களில் பத்திற்கும் அதிகமான கிராமங்களுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் சுமார் 40 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 2000 குடும்பங்கள் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி இருப்பதாகவும், 300 வீடுகளுக்கு மேல் சேதமடைந்துள்ளதாகவும் அம்பாறை மாவட்டப் பிரதேச செயலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு, கிரான் போன்ற பிரதேசங்களே வெள்ளத்தினால் கூடுதலாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களென மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இதில் நேற்றுமுன்தினம் காலையில் இருந்து வெல்லாவெளி கிராமம் முற்றாக வெள்ளத்தால் சூழப்பட்டு மக்கள் அவதிப்பட்டனர். இவர்களை தமிழீழ விடுதலைப்புலிகள் தோணிகள் மூலம் அங்கிருந்து அப்புறப் படுத்தினார்கள். திரு கோணமலை மாவட்டத்தில் பரவ லாக ஞாயிறு தொடக்கம் கடும் மழை பெய்து வருகின்றது. தாழ்ந்த பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. போக்குவரத்துச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. திருமலை அனுராதபுரம், திருமலை-வவுனியா போக்குவரத்துச் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. மூதூர் பிரதேசத்தில் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

## சிறந்த விவசாயிகளுக்கான பரிசளிப்பு விழாவுக்கு அழைப்பு

விவசாயத் திணைக்களமும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மும் இணைந்து நாடாத்தும் சிறந்த விவசாயிகளுக்கான பரிசளிப்பு விழா நிகழ்வு நடைபெறவுள்ளது. எதிர் வரும் 23.12.2004 அன்று முல்லை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த விவசாயிகளுக்கான பரிசளிப்பு ஒட்டு சுட்டான் பாடசாலையில் நடைபெற இருப்பதால் அனைத்து விவசாயிகள் கமக்கார அமைப்பு உறுப்பினர்களையும் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் முல்லை மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். (24)

# யாழ்.குருநகர், திருநகர், பாஷையூர் பகுதிகளில்
# சுகாதார சீர்கேட்டால் தொற்று நோய் பரவும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குருநகர், திருநகர், பாஷையூர் உட்பட யாழ்.புறநகர் பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளமையால் அப்பகுதி மக்களிடையே தொற்று நோய்கள் பரவும் அபாயம் தோன்றியிருக்கிறது.**

யாழ்.மாநகர சபையின் சுகாதார சுத்திகரிப்பு ஊழியர்கள் தமக்கான பாதுகாப்பினை உறுதிசெய்யக் கோரி கடந்த 29 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை பணிப்புறக் கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.இதனால் இப்பகுதியில் நீண்ட நாட்களாக கழிவகற்றும் நடவடிக்கைகள் இடம் பெறாததி னால் இச் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளன.

இதேவேளை கடந்த 14 நாட்களிற்கு மேலாக நீடித்த யாழ். மாநகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்களது போராட்டம் நேற்று முன்தினம் மதியத்துடன் முடிவடைந்துள்ளது.. இதையடுத்து மாநகரசபையின் அன்றாடப்பணிகளும் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. கடந்த மாதம் 29ஆம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் குதித்திருந்த மாநகரசபை சுத்திகரிப்பு தொழிலாளர்கள் கடந்த சில தினங்களாக மாநகரசபையின் பிரதான அலுவலகம் முன்பாகவும் மறியலில் ஈடுபட்டு வந்ததுடன் அதன் அன் றாடப் பணிகளையும் முடக்கியிருந்தனர். யாழ்.பொதுசனநூலகம் மற்றும் சந்தைகள் உள்ளிட்ட பலவும் இதனால் கடந்த சில தினங்களாகப் பூட்டப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் காலை கொட்டும் மழைக்கும் மத்தியில் தொழிலாளர்கள் மறியல் போராட் டத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில் மீண்டும் ஊழியர் சங்கப்பிரதி நிதிகளிற்கும் மாநகர சபை நிர்வாகத திற்குமிடையே பேச்சுக்கள் இடம் பெற்றது. தொழில் பாதுகாப்பு மற்றும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட காலத்திற்கான சம்பளக் கொடுப்பனவு உள்ளிட்ட தொழிலாளர்களது கோரிக்கையினை மாநகரசபை நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளதையடுத்தே தொழிலாளர்கள் போராட்டத்தை விலக்கிக் கொண்டுள்ளனர். (27,33)

# வீதிவிபத்துக்கள் அடிக்கடி நிகழ்வதால் வாகன ஓட்டிகள் விதிமுறைகளைப் பின்பற்றுக!

**-தென்மராட்சி பொது அமைப்புக்கள்-**

தென்மராட்சி பிரதேசத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வீதிவிபத்துக்கள் குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருந்து தங்களது உயிர்களையும் பிறரது உயிர்களையும் சொத்தழிவையும் தவிர்க்க வேண்டும் என . தென்மராட்சி பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன . தொடர்ந்தும் இடம் பெற்று வரும் விபத்துக்களால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை மருத்துவமனை புள்ளிவிபரங்களின் படி கூடியிருப்பதாகவும், அதிக அளவில் உந்துருளி விபத்துக்கள் இடம்பெற்று வருவதால் வாகன ஓட்டிகள் விதிமுறைகளை முழு அளவில் கடைபிடிக்கும் படியும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (28)

# சமகால அரசியல் நிலை குறித்து சாவகச்சேரியில் கருத்தரங்கு

(தென்மராட்சி)

சமகால அரசியல் நிலை குறித்தும் மேற்கொள்ள வேண்டிய அரசியல் முன்னெடுப்புக் குறித்தும் மாதாந்தக் கருத்தரங்கு வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30 மணிக்கு இராமலிங்கா வீதியில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் அவர்களின் இல்லத்தில் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மழை பெய்யும் பட்சத்தில் இக் கருத்தரங்கு சாவகச்சேரி, இந்துக் கல்லூரியில் இடம்பெறும் என தெரிவிக்கப்படுகின்றது. (28)

# எமது பிள்ளைகள் குறித்த நிலையை சனாதிபதியே தெரிவிக்க வேண்டும்

*–யாழ். இல் படையினரால் கைதாகி காணாமல் போனோர் குறித்து அன்னையர் முன்னணி*

(தென்மராட்சி)

யாழ்.குடாநாட்டில் 1996,97 காலப்பகுதியில் சிறிலங்காப் படைகள் மற்றும் அதனோடு இயங்கிய கூலிப்படைகளால் பிடித்துச் செல்லப்பட்ட தமது பிள்ளைகள் நிலைகுறித்து அவர்கள் உயிரோடு இருக்கின்றார்களா இல்லையா என்பதை சனாதிபதி சந்திரிகா தெரிவிக்க வேண்டும் என யாழ்.மாவட்ட அன்னையர் முன்னணித் தலைவர் செ.கனகாம்பிகை கேட்டுக் கொண்டுள்ளார். கடந்த சனிக்கிழமை யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகத்தின் முன்னால் இடம் பெற்ற கண்ட ஆர்ப்பாட்டத்தின் போது அவர் இதனைத் தெரிவித்தார். எம்முடைய பிள்ளைகளைப் பார்க்க நாம் இன்றுவரை ஆவலுடன் இருக்கின்றோம். கடந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் எங்கு இருக்கிறார்கள் அல்லது படையினரால் கொல்லப்பட்டு விட்டார்களா என்ற உண்மை நிலையை அறிந்து கொள்ள விளைகிறோம். இது குறித்து காலந் தாழ்த்தாமல் சனாதிபதி சந்திரிகா அவர்கள் உறுதியான பதிலைத் தரவேண்டும் என்றார் அவர்.

சிங்களப்படைகளால் கைது செய்யப்பட்ட 600இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் குறித்து இதுவரை எந்தவொரு தகவலும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதே வேளை தமது பிள்ளைகளின் நிலை குறித்து உண்மை நிலையைக் கேட்டறிந்துகொள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்திப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்து தருமாறு மனித உரிமைகள் ஆணைக் குழுவினரை அன்னையர் முன்னணியினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.(28)

# வவுனியா பாடசாலை மாணவர்களுக்கு இலவச சீருடைத் துணி விநியோகம்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தெற்கு கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கு 2005 ஆம் ஆண்டிற்கான இலவச சீருடைத்துணிகள் வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா தெற்கு கல்விவலயப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு 2005 ஆம் ஆண்டிற்கான இலவச சீருடைத்துணிகள் பாடசாலை அதிபர்கள் ஊடாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கடந்த இரு வருடங்களாக கிராமசேவை அலுவலர்கள் ஊடாக வழங்கப்பட்டு வந்த இலவச சீருடைத்துணி விநியோகம் ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப்படாமையால் அந்தநடைமுறை நீக்கப்பட்டு இம்முறை மீண்டும் பாடசாலை அதிபர்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளன. (10)

*வடக்கு–கிழக்கு– மாகாண*

# சுகாதார திணைக்கள வாகனங்களை அவற்றிற்கே வழங்க ஆளுநர் உத்தரவு

(வவுனியா செய்தியாளர்)

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் உள்ள சுகாதார திணைக்களங்களுக்கு வழங்கவென உலக வங்கியால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 26 வாகனங்களையும் சுகாதாரத் திணைக்களங்களுக்கே வழங்க வேண்டும் என வடக்குகிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்ணான்டோ வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ரங்கராஜாவிற்கு உத்தர விட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

சுகாதாரத் திணைக்களங்களுக்கென உலக வங்கியால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 26 வாகனங்களில் 15 வாகனங்களை சுகாதார திணைக்களங்களுக்கு வழங்கி விட்டு, ஏனைய 11 வாகனங்களையும் வேறு தேவைகளுக்காக பிரதம செயலாளர் ரங்கராஜா ஒதுக்கி உள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் ஆளுநரிடம் தெரிவித்ததை அடுத்து ஆளுநர் இவ்விடயத்தை ஆராய்ந்து 26 வாகனங்களையும் சுகாதார திணைக்களங்களுக்கே வழங்க வேண்டும் என பிரதம செயலாளர் ரங்கராஜாவிற்கு உத்தரவிட்டுள்ளார். (10)

# மண் அணைகளால் வெள்ளம் வழிந்தோட முடியாமல் பாலங்களையும் வீதிகளையும் மேவிப்பாய்கிறது

**-மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாது அவலம்**

(தென்மராட்சி)

தென்மராட்சியின் உயர்பாதுகாப்பு வலயங்களில் சிறிலங்காப் படையினர் அமைத்துள்ள மண் அணைகளால் வெள்ளம் வழிந்தோட முடியாமல் உசன் பிரதான பாலத்தின் மேலால் பாய்ந்து பாலம் சேதமடைந்துள்ளதோடு மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உசன் பிரதான போக்குவரத்துப் பாலம் மழை வெள்ளத்தால் கடும் சேதமடைந்திருப்பதுடன் பாலத்தின் மேலாலும், வீதியின் மேலாலும் பாயும் வெள்ளத்தால் மக்கள் போக்குவரத்தை மேற்கொள்வதில் பெரும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளனர்.

இச்சாலையின் ஊடாகவே விடத்தற்பளை, பனங்காடு, கெற்பலி, கேடில்ஸ் நகர், தரவை போன்ற பகுதிகளுக்கு போக்குவரத்தை மக்கள் மேற்கொள்கின்றனர். பாலத்தின் நடுப்பகுதியில் பெரும் பள்ளம் ஏற்பட்டுள்ளதாலும், பாலத்தின் இரு பக்கங்களின் வயல்வெளிகளிலும் தண்ணீர் தேங்கி நிற்பதுடன் இந்த நீர் வெளியேறும் வாய்க்கால்கள், மதகுகள் அனைத்தும் கரம்பகம் ஒட்டுவெளிப்பகுதிகளில் சிறிலங்காப் படைகள் அமைத்துள்ள மண் அணைகளால் தடுக்கப்பட்டுள்ளதால் நீர் வெளியேறுவதில் பெரும் சிக்கல் தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் பிரதானசாலையில் இருந்து அரைக் கிலோமீற்றர் வரையான பாலம் கடும் சேதத்திற்குள்ளாகும் ஆபத்து தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)

*- பேராதனைப் பல்கலைக்கழக -*

# வெளிவாரிப் பட்டப்படிப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(வவுனியாசெய்தியாளர்)

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன்.

2001 ஆம் ஆண்டும் அதற்கு முன்னரும் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளவர்கள் 2005 ஆம் ஆண்டு வெளிவாரி மாணவர்களாக தம்மைப் பதிவு செய்து கொள்ள முடியும். 2000 ஆம் ஆண்டு பழைய பாடத்திட்டத்தின் படி உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் அனுமதிக்கப்பட்ட மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தி அடைந்திருப்பதுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான 180 புள்ளிகளுக்குக் குறையாமலும் பெற்றிருக்க வேண்டும். புதிய பாடத்திட்டத்தின் படி உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றியவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்தினால் அனுமதிக்கப்பட்ட மூன்று பாடங்களில் ஒரேதடவையில் சித்தி அடைந்திருப்பதுடன் 135 புள்ளிகளுக்குக் குறையாமலும் பொதுப் பரீட்சையில் 30 புள்ளிகளுக்குக் குறையாமலும் பெற்றிருக்க வேண்டும்.

வெளிவாரி விண்ணப்பதாரிகளாக விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள் எதிர்வரும் சனவரி 31 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேணடும். சனவரி 25 ஆம் திகதிவரை விண்ணப்பப் படிவங்களை பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்புகள் பீடத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

# மருதனார் மடச் சந்தியில் பெண்கள் மீது இளைஞர் குழு சேட்டையெனப் புகார்

மருதனார்மடம் சந்தியில் நிற்கும் இளைஞர் குழுவினரால் அப்பகுதியில் செல்லும் இளம் பெண்கள் பல்வேறு சேட்டைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதாக அப்பகுதியில் உள்ள பொதுமக்களும், ஏனையவர்களும் கவலை தெரிவிக்கின்றார்கள். இச்சந்தியில் பஸ்தரிப்பு நிலையம் இருப்பதுடன் முக்கிய பெண்கள் பாடசாலை, பல்கலைக்கழக நுண்கலைப்பீடம் என்பனவும் இப்பகுதியிலேயே அமைந்துள்ளன. நுண்கலைப்பீடம், பெண்கள் கல்லூரிகள் மற்றும் போக்குவரத்துச் செய்யும் இளம் பெண்கள் என பலரும் இவ்இளைஞர் குழுவின் வேண்டத்தகாத செயல்களுக்கு உள்ளாகிவருகின்றார்கள். கைத்தொலை பேசியில் உள்ள புகைப்படக கருவிகள் மூலம் பெண்களைப் படங்கள் எடுக்கும் முயற்சியிலும் இவர்கள் ஈடுபடுவதாகப் பாடசாலை மாணவர்களும், நுண்கலைப்பீட மாணவர்களும் தெரிவிக்கின்றனர். குறிப்பாக இவ்இளைஞர் குழுவுடன் இச்சந்தியில் மூன்று சில்லு வாகனச் சாரதிகளும் இணைந்து இம்முயற்சியில் ஈடுபட்டு வருகின்றமை காணககூடியதாக உள்ளது. உரியவர்கள் இதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் மக்கள் கேட்டுள்ளனர். (41)



கனடா அமுதகலச அறநெறிக்கழக ஆதரவில் வவுனியா மாவட்ட கல்வி அபிவிருத்தி சபையினால் நடாத்தப்பட்ட கல்வி கற்கும் திறமையுள்ள வறிய மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் உள்ளிட்ட கலந்துகொண்ட விருந்தினர்களையும் உதவி பெறும் மாணவர்களையும் படங்களில் காணலாம். (படம்:-ஆறு சுபாஸ்கரன்)

# இந்து சமுத்திரத்தில் வல்லரசுகளின் அக்கறை

**11-12-2004 அமெரிக்காவில் நடைபெற்ற உலகத தமிழர் வருடாந்த மாநாட்டு நிகழ்வில் இராணுவ ஆய்வாளர் டி. சிவராம் ஆற்றிய உரை**

இயற்கைவாயு மற்றும் கனிமப் பொருட்கள் எல்லாம் நிரம்பக் காணப்படுகின்ற இரண்டு இடங்களில் ஜப்பான் ஒரே கால கட்டத்தில் பிரச்சினையை தீர்க்கின்றேன் என்று காலடி வைக்கின்றது. அதுவும் ஜப்பானுக்கு புதிதாக இந்துமா கடலில் கொடுக்கப்பட்டிருக்கின்ற வேலையினுடைய ஒரு அங்கமாகத் தான் நாங்கள் கொள்ள வேண்டியிருந்து.

ஏனென்றால் அது நடந்த கால கட்டம் அந்த இடங்களினுடைய அமைவை வைத்துப்பார்க்கின்ற பொழுது இந்தப் பிராந்தியத்தில் அமெரிக்காவுடன் கூட்டாக ஒரு செல்வாக்குள்ள சக்தியாக ஜப்பான் தன்னை வளர்த்துக் கொள்கின்ற முயற்சியை நாங்கள் கடந்த 4 வருடங்களில் மிக வெளிப்படையாக காண்கின்றோம். அதுவும் அவர்கள் தங்களுக்குரிய முக்கியமான இடங்களில் தங்களுடைய செல்வாக்கை ஏற்படுத்தக் கூடிய ஒரு நிலைப்பாட்டை எடுத்தமையும் நாங்கள் காணக் கூடியதாக இருந்தது. ஆனால் இரண்டு இடங்களிலுமே ஜப்பான் காலடி வைத்த இரண்டு முயற்சிகளும் படு தோல்வி அடைந்தது என்பதை நான் உங்களுக்கு கூறத் தேவையில்லை.

அடுத்ததாக நாங்கள் சீனாவை எடுத்துக் கொள்ளலாம். சீனாவைப் பொறுத்தவரையில் சீனா இங்கு தன்னுடைய போரியல் நோக்கங்களை விட தன்னுடைய வளர்ச்சிக்குத் தேவையான மூல வளங்கள் வருவதற்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான வேலையில் நீண்டகாலமாக செயற்பட்டு வருகின்றது. அமெரிக்காவினுடைய நோக்கங்களுக்கும் சீனாவினுடைய நோக்கங்களுக்கும் ஒரு வித்தியாசம் இருக்கின்றது. சீனாவைப் பொறுத்தவரையில் சீனா மிக துரிதமாக இன்று வளர்ந்து வருகின்ற ஒருபொருளாதாரம் கொண்ட நாடு. அந்தப் பொருளாதாரம் இயங்குவதற்கு எரிபொருள் என்பது மிக மிக அவசியமான தேவையானதாக இருக்கின்றது. இந்த எரிபொருள் கூடுதலாக கடலின் ஊடாகத்தான் செல்கின்றது.

சீனா மீது ஒரு அழுத்தத்தைச் செலுத்துவதனால் இந்த எரிபொருள் வளங்களின் மீது ஒரு அழுத்தத்தைக் கொடுத்தால் இரண்டுநாள் இயங்குவது கூட நெருக்கடி ஏற்படக் கூடிய ஒரு நிலையில் சீனா இருக்கின்றது. ஆகவே தான் சீனா தன்னுடைய எரிபொருளைக் கொண்டு வருகின்ற கடற்பாதைக்கு தான் பாதுகாப்பு வழங்கக்கூடிய சில ஒழுங்குகளை இந்தப் பிராந்தியத்தில் செய்திருக்கின்றது.

அதில் மலாக்கா நீரினை முக்கியமான நீரினையாக இருக்கின்றது. இதை விட முக்கியமான நீரினையாகஹோமஸ் நீரினை இருக்கிறது. இதன் தென்பக்கத்தை அமெரிக்கா கட்டுப்படுத்துகின்றது அமெரிக்காவினுடைய கூட்டு நாடுகள் கட்டுப்படுத்துகின்றன. இதனுடைய வடமுனையில் ஈரான் இருக்கின்றது. ஈரானின் கரையோரத்தில் வன்டர்அபாஸ் எனப்படும் துறைமுகத்தை கடற்படைத்தளமாக ஆக்குவதற்கு சீனா நீண்டகாலமாக ஈரானுடன் செயற்பட்டு வருகின்றது.

அந்தப்பாதையில் வரும் போது அடுத்ததாக காணப்படுவது பாகிஸ்தானுடைய கரையோரம். இந்தக் கரையோரத்தில் ரியாடார் எனுமிடத்தில் ஒரு கடற்படைத் தளத்தை உருவாக்குவதற்கு உதவிவருகிறது. அதை வெளிப்படையாக போரல்லாத வேறு வேலைகளுக்காத்தான் இந்த் கடற்படைத்தளத்தை கட்டியமைப்பதற்கு பாகிஸ்தானுக்கு சீனா உதவுவதாக கூறினாலும் அதுவும் அந்தப்பாதையில் சீனாவினுடைய பாதுகாப்புக்கு உத்தரவாதமாக அமைந்திருக்கின்றது. இந்தப் பாதை அடுத்ததாக சந்திக்கின்ற இடம் இலங்கையினுடைய முனை. இந்தப்பகுதியில் சீனா முதலாவதாக சந்திப்பது மாலை தீவு. மாலைதீவில் 1999ஆம் ஆண்டு மாலைதீவிலிருக்கின்ற ஓமோறோ தீவு என்கின்ற ஒரு தீவை ஒரு தளமாக மாற்றுவதற்குரிய பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தது. 2001 ஆம் ஆண்டு சீனாப்பிரதமர் மாலைதீவிற்கு சென்றபோது அந்த ஒப்பந்தத்தை முடித்துள்ளார்கள். 2010 ஆம் ஆண்டளவில் அந்தத்தளம் நடைமுறைக்கு வரும் என்று கூறப்படுகின்றது.

அடுத்ததாக சீனா நீண்டகாலமா இலங்கையினுடைய எரிபொருள் துறையோடு நெருங்கிய சம்பந்தமுள்ள ஒரு நாடாக இருக்கின்றது. அது பலருக்குத் தெரியாது. இலங்கையினுடைய பெற்றோலிய கூட்டுத்தாபனத்துடன்அதனுடைய வளர்ச்சியில் நெருங்கியதொடர்புள்ள ஒரு நாடாக முக்கிய நாடாக சீனா நீண்ட காலமாக இருக்கிறது. இந்தியா பற்றிய சிறிலங்கா அரசியல் தலைவர்களுக்கு இருக்கும் அச்சங்கள் காரணமாக சீனாவுடன் உறவை வளர்த்து வந்தார்கள். அதனுடைய வெளிப்பாடாகத்தான் திருகோணமலைக்கு மாற்றான் ஒரு எண்ணெய்க் குதத்தை மேற்கு கரையோரத்தில் சீனா கட்டி முடித்தது. 2000.ஆம் ஆண்டு கட்டத் தொடங்கி அண்மையில் அதைக் கட்டி இலங்கை அரசிடம் கையளித்திருக்கின்றது. ஆனால் ஒரு பிரச்சினையொன்று வரும் போது அதாவது சீனாவிற்கு தன்னுடைய எரி[illegible]ருள் பாதையில் பிரச்சினை ஏற்படும் பே[illegible] முத்துராஜவலயில் உள்ள எ[illegible]ணய் தாங்கி வயல் பகுதி முக்கிய இடமாக அமையும் என்று தெளிவாகின்றது. இவ்வாறாக சீனாவும் இலங்கையினுடைய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை முழுமையாக இந்தியாவிற்கு கொடுக்கக் கூடாது என்பது தொடர்பாக சில தொழில் சங்க வேலை நிறுத்த நடவடிக்கைகள் கூட நடைபெற்றன. அதன் பின்னணியில் சீனாவின் நலன்கள் இருப்பதாக அதாவது சீனாவின் பகுதியிலிருந்து தன்னுடைய செல்வாக்கை வலுப்படுத்திக் கொள்வதற்கான ஒரு நிலைப்பாட்டை எடுப்பதாகவும் கொழும்பில் இருக்கக்கூடிய ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

அடுத்ததாக இந்தியாவை எடுத்துக் கொண்டால் அது ஒரு சுதந்திர நாடாவதற்கு முன்னரே கே.எம் பனிக்கர் போன்றோர் இந்தியா ஒரு கடல் வல்லரசாக வரவேண்டுமென்பது பற்றி எழுதியிருக்கிறார். அவருடைய நூலில் சில விடயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதாவது இந்தியா ஒரு வல்லரசாக[illegible] வர வேண்டுமென்றால் இந்தியா சொக்கோ[illegible]றத் தீவு ஏடன் ஆகியவற்றை கட்டுப்படுத்த வேண்டும் மொறீசியசை கட்டுப்படுத்த வேண்டும். மலாக்கா நீரினையில் இந்தியா மேலாதிக்கம் செலுத்த வேண்டும் என்றெல்லாம் அவர் விரிவாக எழுதியிருக்கிறார். ஆனால் அவர் அவ்வாறெல்லாம் கூறிய பின்னர் சுதந்திரமடைந்த இந்தியாவின் தவிப்பெல்லாம் நீண்ட காலமாக இந்தியா பெருநிலப்பரப்பில் தான் குறியாக இருந்தன. காரணம் சீனாவினுடைய அச்சுறுத்தல். அடுத்து பாகிஸ்தானுடைய சிக்கல் இவற்றின் காரணமாக இந்தியாவினுடைய கவனமெல்லாம் 1970துகள் வரை தமது பெருநிலப்பரப்பிலேதான் காணப்பட்டு வந்தது. ஆனால் 70 களின் ஆரம்பத்தில் டியோகொகாசியா தீவில் அமெரிக்கா காலடி எடுத்து வைத்த பின்னரும் 1971ஆம் ஆண்டு பங்களாதேஷ் போரின் போது கடல் அந்தளவுக்கு முக்கியமானதொரு பங்கை வகித்தது அதே வேளையில் அந்தகடற்பகுதிக்குஅமெரிக்கா தன்னுடைய விமானத்தாங்கி பெரும் கப்பலை அனுப்பி பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. இந் நிலைமைகள் எல்லாம் தோன்றிய பின்னர் கடலைப்பற்றிய ஒரு குறிப்பான அச்சம் இந்தியாவுக்கு மீண்டும் தோன்றியிருந்தது. அதன் வெளிப்பாடாக இந்துமாகடலின் அதிகமான பகுதிகளில் இந்தியா பல கடல் ஒப்பந்தங்களை செய்வதற்கான ஊக்கத்தைக் கொடுக்கின்றது. அதில் இலங்கையுடன் கடல் ஒப்பந்தம் மாலைதீவுகளுடனும் பல ஒப்பந்தங்களை இந்தியா செய்து கொண்டது. அதனூடாக இந்தப்பிராந்தியத்தை தெளிவாக வரையறுக்கின்ற ஒரு வேலையை இந்தியா செய்கின்றது. அதற்கடுத்ததாக இந்தியா முதன்முறையாக கடற்புறம் எனும் கடற்படைத் தளத்தை நிறுவிவருகின்றது. அத்தோடு ரஷ்யாவிடம் இருந்து அற்மிரல் வொஸ்கோ எனப்படும் ஒரு வான்படைத் தாங்கிக் கப்பலை வாங்குவதற்கான ஒப்பந்தத்தை இவ்வருடம் சனவரி மாதம் இந்தியா செய்துகொண்டது. அதாவது இந்தியா ஒருகரையோரப் பாதுகாப்பு என்ற நிலையில் இருந்து மாறி இந்துமா கடல் பகுதியினை கண்காணிக்கக்கூடிய ஒரு வளர்ச்சிப்போக்கினையும், காணக்கூடியதாகவிருக்கின்றது.

ஆனால் 1976 ஆம் ஆண்டு இலங்கையுடன் செய்துகொண்ட கடல் மல்டவுண் கோட் ஒப்பந்தம் போன்ற பல ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் வங்களா விரிகுடாவினுடைய பாதுகாப்பையும், இந்தப்பகுதியால் செல்கின்ற கடற்பாதை தொடுகின்ற இடம் இந்தியாவுக்குச் சொந்தமானது. அதாவது அந்தமான் நிக்கோபார் தீவுகள் இப்பகுதியினை இப்பொழுது தனிக்கட்டளைத் தளமாக இந்தியா மாற்றியிருக்கின்றது. அத்தோடு இந்தியாவிற்கு ஒரு இயற்கையான அரணாக லட்ச தீவுகள் காணப்படுகின்றன. இவையும் போதாதென்கிற நிலையும் இன்று ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் ஒன்று அமெரிக்கா ஏற்படுத்தி வருகின்ற சில ஒழுங்குகள். தற்பொழுது டியோகொகாசியா அமெரிக்காவின் படைப் பலத்திற்கு அடித்தளமாக இருக்கின்றது. இது பிரிட்டிஷாரால் அமெரிக்காவிற்கு வழங்கப்பட்ட ஒரு பகுதியாகும். இது மொறிசியஸ் தீவினுடைய ஒரு பகுதியாக இருந்தது. மொறிசியஸ் சுதந்திரமடைந்த பொழுது டியோகோ காசியா தீவு மொறிசியசுக்குச் சொந்தமாகியிருக்க வேண்டும் சட்டப்படி; ஆனால் அது கொடுக்கப்படவில்லை. இந்தியா இப்பொழுது வெளிப்படையாக மொறிசியாஸ் தீவினுடைய இறைமையை வலியுறுத்தி வருகின்றது. அதாவது மொறிசியஸ் தீவிற்கு டியோகோ காசியாத் தீவு மீண்டும் சொந்தமாகும் பட்சத்தில் அமெரிக்கா இந்துமா கடலில் காலூன்றுவதற்கான அடிப்படைத் தளம் இல்லாமல் போகும். இதை அமெரிக்காவும் உணர்கின்றது. அதன் காரணமாகத் தான் இலங்கையில் ஒரு முக்கியமான தளத்தை ஏற்படுத்துகின்ற வேலைகள் அண்மைக் காலமாக மிக மும்முரமாக நடைபெற்று வந்தன. இதனடிப்படையில் இதற்கான ஒப்பந்தம் 2002 ஆம் ஆண்டு நடைபெறவிருந்ததை இந்தியா தலையிட்டு அதைத் தடுத்திருக்கிறது. ஆனால் எவ்வாறாயினும் இலங்கையிலும், மாலைதீவிலும் காலூன்ற வேண்டும் என்பதில் அமெரிக்கா மிகத் திட்டவட்டமாக இருக்கின்றது. இதில் 2 ஆம் பேச்சிற்கே இடமில்லாத வகையில் முன்னர் அதை இரகசியமாகச் செய்தார்கள். இப்பொழுது வெளிப்படையாக அவர்களது ஆவணங்களில் அவற்றைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இங்கு ஈழத்தமிழர்களுடைய எதிர்காலமும் பின்னிப்பிணைந்து தான் இருக்கின்றது. ஏனென்றால் 1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் சாராம்சத்தைப் பார்த்தால் இலங்கையில் வேறு நாட்டுப் படைகள் தலையிடமுடியாது. இலங்கையின் வான், கடல்படைத்தளங்களை குறிப்பாக திருகோணமலையை வேறு எந்த நாடும் பயன்படுத்தமுடியாது. இந்தத் துறைமுகங்களை இந்தியாவுடன் கூட்டாகத் தான் பயன்படுத்த முடியும் என்பது தான் இவ் ஒப்பந்தத்தின் அடிப்படை. ஆகவே ஈழத் தமிழர்கள் பிரச்சினையில் இந்தியா தலையிட்டதற்கு அன்று அமெரிக்காவின் அச்சுறுத்தல் தான் மிக முக்கிய காரணம். அத்தோடு ஈழத்தமிழர்கள் இல்லாத நிலையில் இலங்கை அரசியல் வாதிகளுக்கு ஒரு அழுத்தத்தைக் கொடுத்திருக்க முடியாத ஒரு நிலையும் இந்தியாவிற்கு இருந்தது. எனவே மீண்டும் இலங்கை கைநழுவிச் சென்று விடாமல் இருப்பதற்கு ஈழத்தமிழர்களின் அழுத்தமும் அங்கு தேவையாக இருக்கின்றது என்ற கணிப்பில் இந்தியா செயற்படுகின்றது.

## மன்னாரில் தொடர்ந்து பெய்த மழையினால் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கின

### வீதிகள் போக்கு வரத்துச் செய்ய முடியாத நிலை

மன்னாரில் நேற்றுமுன்தினம் இரவு தொடக்கம் பெய்த கடும் மழையினால் பல இடங்கள் பாரிய வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

சாந்திபுரம், எமில்நகர் நூறு வீட்டுத்திட்டம், ஒல்லிமோட்டை போன்ற இடங்கள் வெள்ளத்தால் மூழ்கியுள்ளதால் அங்குள்ள மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இதேவேளை கன்னியர் மட வீதி, மூர்வீதி, பெற்றாவீதி, விளையாட்டரங்கு வீதி போன்ற வீதிகள் வெள்ளத்தில் மூழ்கி போக்குவரத்துக்கு பெரும் இடையூறாக உள்ளது. மன்னாரில் கடைசியாக பெய்த மழை வீச்சியின் அளவு43.0 மில்லிலீற்றர் ஆகும். (18)

## நிலாவெளி அரசியல் துறை செயலகம் எரிப்பு முயற்சி குறித்து விசாரணை

திருமலை - விடுதலைப்புலிகளின் நிலாவெளிப்பிரதேச அலுவலகத்தை எரிப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது தொடர்பாக நிலாவெளிப்பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தூயவன் செய்த முறைப்பாடு தொடர்பாக,திருகோணமலையில் உள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் இரண்டு பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் காலை நிலாவெளி சென்று விசாரணைகளை மேற்கொண்டதாக கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

நிலாவெளிப் பிரதேச அலுவலகத்துக்கு அண்மையில் நிலைகொண்டுள்ள கடற்படைப் பிரிவைச்சேர்ந்தவர்கள் அரசியல்துறை அலுவலகத்தை எரிக்கும் முயற்சியில் தொடர்புபட்டிருக்கலாம் என்று நிலாவெளி அரசியல்துறை குற்றஞ்சாட்டியிருந்தது தெரிந்ததே. (25)



சிறப்புப் பயிற்சி நெறிகள் நிறைவு நாள் நிகழ்வில்...

## 06.12.2004—12.12.2004




**06**

*. தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் சிறப்புப் பயிற்சிகளை நிறைவு செய்து வெளியேறும் சிறப்பு அணிகளுக்கான தகைமைச் சான்றிதழ்களை தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார்.

*. யாழ்ப்பாணம் வீரசிங்கம் பண்டபத்தின் இரண்டாவது மாடியில் உள்ள சக்தி தொலைக்காட்சியின் விசேட ஒளிபரப்பு நிலையம் அடையாளம் தெரியாதவர்களினால் தாக்கப்பட்டது.

**07.**

*. மட்டக்களப்பு அரசியல் துறை அலுவலகம் மீது கைக்குண்டுத் தாக்குதல்.

*. முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க மீது உச்சநீதிமன்றம் இரண்டாண்டு கடூழியச் சிறைத் தண்டனை விதிப்பு.



எஸ்.பி.க்கு சிறைத்தண்டனை..

*. ஈராக் தீவிரவாதிகளினால் பிடிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையரான தினேஷ் தர்மேந்திரா விடுதலை.

*. மட்டக்களப்பில் ரெலோ செயலாளர் நாயகம் பிரசன்னா இந்திரகுமாரின் வியாபார நிலையம் மீது குண்டுத்தாக்குதல்.

**08**

*. முன்னாள் அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்காவுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாராளுமன்றத்தில் ஐ.தே.க.வின் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர். அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் செங்கோலைத் தூக்கிச் சென்று பெரும் பரப்பை ஏற்படுத்தினார்.



பாராளுமன்ற ஆர்ப்பாட்டம்

*. மட்டக்களப்பிலுள்ள தினக்குரல் காரியாலயம் மீது இனம்தெரியாதோரால் கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

*. யாழ். நகரப் பகுதியிலுள்ள தமிழீழ விடுதலைக் கழகத்தின் பணிமனை மீது இரு கைக்குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது.

*. பளை கமநல சேவைகள் திணைக்கள கட்டடத்தினுள் வயோதிபரின் சடலம் கண்டெடுப்பு.

* யாழ். நகரில் தீவிபத்தில் இரு கடைகள் எரிந்தன.




எரிந்த கடை

**09.**

* எந்தவிதமான இராணுவச் சவாலையும் எதிர்கொள்ளத் தயார் என கடற்படைத் தளபதி தயாசந்கிரி கடற்படையின் 54ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் தெரிவித்தார்.

* பருத்தித்துறையில் இனந்தெரியாத வர்கள் வீட்டினுள் புகுந்து யுவதியொரு வரைக் கத்தியால் குத்திக்கொலை செய்தனர்.

* மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தம்பிராஜா தங்கவடிவேலின் மெய்க்காப்பாளரான பொலிஸ் கான்ஸ்டபிள் சின்னத்துரை கைலேஸ்வரன் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

* ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்புத் திரும்பப் பெறப்பட்டது.

* யாழ்.செயலகம் முன் மக்கள் மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கக் கோரி மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

* பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின்றி பேரினவாதக் கட்சிகள் இணைந்து பிரேரணைகளை நிறைவேற்றியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பாராளுமன்றத்தில் நடத்திய போராட்டத்தால் பாராளுமன்றத்தில் அமளி துமளி ஏற்பட்டு ஒரு மணிநேரம் ஒத்தி வைப்பு.

**10.**

* சர்வதேச மனிதவுரிமைகள் தினம் கிளி. பண்பாட்டு மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மனித உரிமைகள் தினம்

* சர்வதேச மனிதவுரிமைகள் தினத்தை முன்னிட்டு யாழ்.மனிதவுரிமைகள் செயலகம் முன்பாக படையினரால் கைதாகிக் காணாமற் போனோரின் நலன் வேண்டி தீபம் ஏற்றி பிரார்த்தனை இடம்பெற்றது.



காணாமற்போனோர் பிரார்த்தனை

* மட்டக்களப்பு அரசடியிலுள்ள தினக்குரல் அலுவலகம் மீது இரண்டாவது தடவையும் கைக்குண்டு வீச்சு.

* மூத்த அறிஞர் சொக்கன் காலமானார்.



**11**

* லெப்.கேணல் மறவன் சுகயீனம் காரணமாகச் சாவடைந்தார்.



லெப். கேணல் மறவனின் இறுதி ஊர்வலம்

* கிழக்கில் கருணாகுழு என்ற அமைப்பு தற்போது இல்லை. இதன் பெயரில் இராணுவப் புலனாய்வுத்துறையினர் தான் இயங்குகின்றனர் என மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் செய்தியாளர்களிடம் தெரிவிப்பு.

* கொழும்பு, குதிரைப்பந்தயதிடலில் நடைபெற்ற ஹிந்தித் திரைப்பட நடிகர்களின் நிகழ்வின் போது குண்டு வெடித்ததில் இரண்டு பேர் பலி.



கொழும்பு குண்டு வெடிப்பு

**12.**

* நிலாவெளியில் உள்ள விடுதலைப் புலிகளின் பிரதேச அரசியல்துறைச் செயலகத்திற்குத் தீ வைக்க இனந் தெரியாதோர் முயற்சி.




அரசியல்துறை செயலகம்

* மட்டக்களப்பிலுள்ள வெதுப்பகம் ஒன்றின் மீது இனந்தெரியாதோர் குண்டு வீச்சு.

* எஸ்.பி.திஸாநாயக்கவிற்கு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சுயாதீனமானதென சனாதிபதி சந்திரிகா மாத்தறையில் நடைபெற்ற நிகழ்வில் தெரிவிப்பு.

* ஈராக் தீவிரவாதிகளினால் கடத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்ட தினேஷ் தர்மேந்திரா இலங் கைக்கு வருகை.



தினேஷ் தர்மேந்திரா குடும்பத்துடன்

# முள்ளியவளை கணுக்கேணியில் வீரமுரசு கலை நிகழ்வுகள்

(முள்ளியவளை)

முள்ளியவளை கணுக்கேணியில் கடந்த 9ஆம் திகதி வீரமுரசு கலை நிகழ்வு சிறப்பாக நடைபெற்றுள்ளது. முள்ளியவளை பிரதேச முறிப்பு வலயத்தின் அரசியல் துறைப்பொறுப்பாளர் இ.செந்தூரனின் ஒழுங்கு படுத்தலில் இரவு 8.00 மணிக்கு கணுக்கேணி கற்பக விநாயகர் ஆலய வீதியில் அலங்கரிக்கப்பட்ட மேடையில் இந் நிகழ்வு சிறப்புற நடைபெற்றது. கணுக்கேணி கிழக்கு தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் குகதாசனின் தலைமையில் நடைபெற்ற மேற்படி வீரமுரசு கலைநிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச்சுடரினை மேஜர் நிமலராஜனின் தந்தையார் ஏற்றிவைக்க, முதல் மாவீரர் லெப்.சங்கரின் திருவுருவப்படத்திற்கு மேஜர். செம்பியனின் சகோதரன் ஈகச்சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து முதல் பெண் மாவீரர் 2 ஆம் லெப்.மாலதியின் திருவுருவப்படத்திற்கு மேஜர் வாணியின் தாயார் ஈகச்சுடர் ஏற்றி வைத்து மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து கலைநிகழ்வுகள் ஆரம்பமாகின. நாடகம் பட்டிமன்றம் கவிதை, பாட்டு, மாவீரர் நடனம் என பல கலை நிகழ்வுகள் இடம்பெற, இடையே கருத்துரையினை குமுளமுனை வலய பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் சிவகுமார் நிகழ்த்த 9 நிகழ்வுக்கான சிறப்பு கருத்துரையினை சமகால அரசியல் நிலை தொடர்பாக முள்ளியவளைப் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் இ.நாகமைந்தன் ஆற்றியுடன் நிகழ்வுகள் இனிதே நிறைவானது. (ஆ)

# புலிகளின் தேவைக்கேற்ப நாட்டை தள்ளுவதே ஐ.தே.க.வின் நோக்கம்

## ஜே.வி.பீ. தலைவர் சோமவன்ச அமரசிங்க

விடுதலைப்புலிகளுக்கு தேவையான வகையில் நாட்டை ஓர் இக்கட்டான நிலைக்குள் தள்ளுவதே ஐ.தே.கட்சியின் நோக்கம் என ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இச்சட்டதிட்டத்தை நன்கு புரிந்து அதனை தோற்கடிக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார். ஜே.வி.பி.யின் முன்னிலையில் உரையாற்றிய வேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில்
26.09.1973

ஆண்டவன் மடியில்
08.12.2002

அமரர்

### கனகரத்தினம் கனேசகுமார்

திதி: 15 . 12 . 2004

கணேசா!
நீ மறைந்து ஈராண்டு சென்றாலும்
இமைப்பொழுதும் நீங்கவில்லை உன் நினைவு
காலம் முழுதும் கண்ணீரில் கரைகின்றோம்
ஆறுமோ நெஞ்சம்.

தகவல்:-
சி.சிவகுமார் (மைத்துனர்)
இல. A.32 குமரபுரம்,
பரந்தன்.

என்றும் உன் நினைவுடன்
அப்பா, அம்மா, பெரியம்மா,
அண்ணா, அண்ணி, அத்தான்,
அக்கா, மருமகள்

(5403)


## மண்சரிவினால் போக்குவரத்து நிறுத்தம்

பதுளை மாவட்டத்தில் தொடரும் மழை காரணமாக போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளது. மழை காரணமாக நேற்று முன்தினமிரவு முதல் புகையிரத சேவையும் தடைப்பட்டுள்ளது. மண்சரிவு காரணமாக புகையிரதப் பாதை தடைப்பட்டுள்ளதாலேயே சேவைகள் இடையில் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன.

## வீதயோரத்தில் குண்டு வெடிப்பு

கொழும்பு உறுகொடவத்தப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை வீதியோரம் குண்டொன்று வெடித்துள்ளது. இனந்தெரியாத ஒருவர் இக்குண்டை வீசியுள்ளதாகவும் ஆனால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனவும் பொலிசார் தெரிவித்தனர். இது தொடர்பாக பல்வேறு வதந்திகள் பரவியதாகவும் பொலிசார் கூறினர்.

## மியன்மாரிலிருந்து இலங்கைக்கு அரிசி

இலங்கைக்கு இரண்டாயிரம் மெற்றிக்தொன் அரிசி வழங்க மியன்மார் அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது. தற்போது அரிசியின் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து சிறிலங்கா பிரதமர் மகிந்த ராஜபகஷ விடுத்த வேண்டு கோளையடுத்து இவ்வாறு இணக்கம் தெரிவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# இராணுவத்திலிருந்து ஓடியோரை கைது செய்யும் நடவடிக்கை ஆரம்பம்

இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதுவரை கொழும்பு, கம்பா மற்றும் களுத்துறை ஆகிய பகுதிகளில் உள்ள இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களுக்கு நிரந்தரமாக சேவையில் இருந்து விலகும் சந்தர்ப்பம் பல தடவைகளாக வழங்கப்பட்டன. இந்த நிலையில் இதனைப் பயன்படுத்திக்கொள்ளாமல் தொடர்ந்தும் மறைந்து வாழும் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களே கைது செய்யப்படவுள்ளனர். இதுவரை இவ்வாறானவர்கள் 36 பேர் கைது செய்யப்பட்டு இராணுவத் தலைமையகத்தில் அமைக்கப்பட்டுள்ள யுத்த நீதிமன்றத்தினால் சிறைத்தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையில் குருநாகல் மாவட்டத்தில் உள்ள இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களுக்கு நிரந்தரப் பணி நீக்கம் வழங்கும் சந்தர்ப்பம் இன்று முதல் எதிர்வரும் 19ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளது. (32)

# காலி நீதிமன்றமருகே கைக்குண்டுகள் மீட்பு

காலி கோட்டையில் அமைந்துள்ள சுற்றுலா நீதிமன்றத்திற்கு அருகில் நேற்று முன்தினம் கைக்குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவை இலங்கை கடற்படையினர் பயன்படுத்தும் குண்டுகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை நீதிமன்றத்தில் ஏதாவது தாக்குதல் நடத்துவதற்காக எடுத்து வரப்பட்டிருக்கலாம் என பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

(32)

# சிறையிலிருக்கும் ஒருவர் புத்தகம் எழுதத் தடையில்லை

## சிறைச்சாலை ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறையில் தண்டனை பெற்றுவரும் கைதி ஒருவர் சிறைச்சாலை ஆணையாளரின் அனுமதியுடன் புத்தகம் எழுதி வெளியிடுவதற்கு உரிமை உண்டு என சிறைச்சாலை ஆணையாளர் குணரத்ன குறுப்பு தெரிவித்துள்ளார். தான் சிறை சென்றால் சனாதிபதி சந்திரிகா தொடர்பாக புத்தகம் ஒன்றை எழுதப்போவதாக எஸ்.பி.திஸாநாயக்க ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார். இப்புத்தகத்தை வெளியிடுவதற்கு சிறைத்தண்டனை பெற்றுள்ளவரின் குடும்பம் செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.


## புத்தக கண்காட்சியும் விற்பனையும்

எமது நிறுவனத்தால் நவம்பர் 22முதல் 30 வரை நடாத்தப்பட்டுக்கொண்டிருந்த மேற்படி கண்காட்சியும் விற்பனையும் டிசம்பர் 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வன்னிவாழ் மக்களும், பொது நிறுவனங்களும் பயன்பெறும் வண்ணம் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட அனைத்து வகையான தமிழ், ஆங்கில புத்தகங்களும் உள்நாட்டு வெளியீடுகளும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். விசேட விலைக் கழிவுகள் வழங்கப்படும்.

சிறிலங்கா புத்தகசாலை,
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி. 021-2222573

(5358)



## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அன்னைமடியில்
25 02 1967

ஆண்டவனின்அடியில்
16 11 2004

அமரர்

### செல்வரட்னம் சுகிர்தன் (திவாகர்)

எங்கள் குடும்பத்தின் கலங்கரை விளக்காக பிரகாசத்துடன் வாழ்ந்து 16.11.2004 அன்று சிவபதமடைந்த 223 சில்வாவீதி வட்டக்கச்சியைச் சேர்ந்த அமரர்-செல்வரட்னம் சுகிர்தன் (திவாகர்) அவர்களின் 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியையும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் எதிர்வரும் 16.12.2004 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறுவதுடன், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம். அன்னாரின் இறுதிச் சடங்கின்போது நேரில் வருகை தந்தும், மலர்வளையங்கள், கண்ணீர் அஞ்சலிகள் வழங்கியவர்களுக்கும் அஞ்சல் மூலமும், தொலைத் தொடர்பு மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் எல்லாவகையிலும் உதவியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

(5401)



## SONY காட்சியறை




அரசகிளிகள்

(KING PARRATS)

வன்னிவாழ் மக்களுக்காக கிளிநொச்சி தமிழீழ வைப்பகத்திற்கு முன்பாக SONY காட்சியறை 09.12.2004 ஆம் திகதி திறக்கப்பட்டுள்ளது.

வடபகுதிக்கான ஒறிஜினல் சொனி ஏக விநியோகஸ்தர்களாகிய "கிங்பரட்ஸ்" ஸ்தாபனத்தார்களின் காட்சியறைகள் வவுனியா, யாழ்ப்பாணம், நெல்லியடி ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. தற்போழுது கிளிநொச்சி நகரிலும் "அரசகிளிகள்" என்ற பெயருடன் திறக்கப் பட்டுள்ளதுஎன்பதை அறியத் தருகிறார்கள்.

உலக SONY நிறுவனத்தின் இலங்கைக்கான ஏக விநியோகஸ்தர் சீடில்ஸ் பிறைவேற் லிமிரட், சீடில்ஸ் நிறுவனத்தின் வடபகுதிக்கான ஏக விநியோகஸ்தர் "கிங்பரட்ஸ்".

2 வருட முழுமையான உத்தரவாதத்துடன் ஒறிஜினல் சொனி தயாரிப்புகளை வேண்டுவதற்கு நாடவேண்டிய நம்பிக்கையான இடம்.

அரச கிளிகள்,
தமிழீழ வைப்பகத்திற்கு முன்பாக,
யாழ்.சாலை,
கிளிநொச்சி.

(சி.10964)

# ஜெயேந்திரரை ஜாமீனில் எடுக்க

## மூத்த வழக்கறிஞர்கள் சட்ட நிபுணர்களுடன் ஆராய்வு

(புதுடில்லி)

காஞ்சி வரதராஜ பெருமாள் கோவில் நிர்வாகி சங்கரராமன் கடந்த செப்ரம்பர் மாதம் 3ஆம் திகதி கொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பாக காஞ்சி மடாபதி ஜெயேந்திரர் உள்ளிட்ட 20 பேர் கைது செய்யப்பட்டனர். ஜெயேந்திரர் வேலூர் மத்திய சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.. சிறையில் இருக்கும் ஜெயேந்திரர் பிணைகேட்டு இரு முறை சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார் பிணை மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது. எனவே அவர் 32 நாட்களாக சிறையில் இருந்து வருகிறார். இதைத் தொடர்ந்து கடந்த 9ஆந் திகதி ஐகோர்ட்டு வழங்கிய தீர்ப்பை எடுத்துக்கொண்டு சட்டவாளர்கள் சிலர் டெல்லிக்கு விமானம் மூலம் விரைந்து சென்றனர். மூத்த வழங்கறிஞர்கள் '. கிருஷ்ணமணி, கிருஷ்ணகுமார்,. நாரிமன், ஹரிசால்வே போன்ற சட்ட நிபுணர்களுடன் கடந்த 4 நாட்களாக ஆலோசனை நடத்தி வருகிறார்கள். "பப்பு யாதேவ்" வழக்குத் தீர்ப்பு அடிப்டையில் ஜெயேந்திரருக்கு உயர் நீதிமன்றம் பிணை வழங்க அதிகாரம் இல்லை. எனவே பப்புயாதேவ் தீர்ப்பில் உள்ள சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்தும் எப்படிப்பட்ட விவாதம் அடிப்டையில் சுப்ரீம் கோர்ட்டில் பிணை பெறலாம் என்று சட்ட நிபுணர்கள் ஆலோசித்து வருகிறார்கள்.

# ராஜீவ் கொலைச் சதியில் சந்திராசாமிக்குத் தொடர்பு

## –வெளிநாடு செல்ல நீதிமன்று அனுமதி மறுப்பு

(புதுடில்லி)

ராஜீவ்காந்தி கொலைச் சதியில் தொடர்பு இருப்பதாகக் கூறி சந்திராசாமி வெளிநாடு செல்ல இந்திய உயர் நீதிமன்றம் அனுமதி மறுத்துள்ளது. அரசியல்சாமியார் சந்திராசாமி மீது அன்னியச் செலாவணி மோசடி வழக்கு தொடரப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

இதற்கிடையே தனது பக்தர்களைச் சந்தித்து சொற்பொழிவு நடத்தவேண்டியது இருப்பதால் வெளிநாடு செல்லதனக்கு அனுமதி வழங்கும்படி டெல்லி கூடுதல் தலைமை மெட்ரோ பாலிடன் மாஜிஸ்திரேட்டு நீதிமன்றில் சந்திராசாமி மனு கொடுத்து இருந்தார்.

நேற்று முன்தினம் இந்தமனு மீது விசாரணை நடந்தது. அப்போது ராஜீவ்காந்தி கொலைச்சதியின் பின்னணி பற்றி விசாரிதது வரும் சி.பி.ஐ. புலனாய்வுக்குழுத் தலைமை அதிகாரி பி.என்.மிஸ் ராவும், சி.பி.ஐ. சட்டவாளரும் உயர்நீதிமன்றில் ஆஜராகி சந்திராசாமிக்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்கக் கூடாது என்று கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அவர்கள் கூறியதாவது;

ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்ட சதியின் பின்னணியில் சந்திராசாமிக்குத் தொடர்பு இருப்பதாகவும், சதியை நிறைவேற்ற அவர் பண உதவி செய்து இருப்பதாகவும் கடந்த வாரம் இதே நீதிமன்றில் தெரிவித்தோம் சந்திராசாமியின் தொடர்பு பற்றி நாங்கள் ஏராளமான ஆதாரங்களைத்திரட்டி இருக்கின்றோம். மாஜிஸ்திரேட்டு மட்டும் பார்வையிடும் வகையில் அந்த ஆதாரங்களை நீதிமன்றில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறோம். எனவே சந்திராசாமி வெளிநாடு செல்ல அனுமதி வழங்கக் கூடாது. இவ்வாறு சி.வி.ஐ.தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து சி.வி.ஐ.யிடம் உள்ள ஆதாரங்களை தனது அறைக்கு எடுத்து வந்து காட்டும்படி மாஜிஸ்திரேட்டு ரவீந்தரர் உத்தரவிட்டார். சி.வி.ஐ. அதிகாரிகள் சந்திராசாமி சம்பந்தப்பட்ட ஆதாரங்களை மாஜிஸ்திரேட்டு அறைக்கு எடுத்துச் சென்று காட்டினார். பின்னர் மாஜிஸ்திரேட்டு சந்திராசாமி வெளிநாடு செல்லஅனுமதிக்க முடியாது என்று கூறி அவருடைய மனுவை தள்ளுபடி செய்தார்.


**மக்கள் வங்கி சிசு உதான சாதனையாளர் தேசிய விருது**

**2004**

## நன்றி நவிலல்

இப்போட்டியில் வெற்றியீட்டுவதற்கு சகல வழிகளிலும் உதவி புரிந்த தமிழீழ விளையாட்டுத் துறையினருக்கும், கிளி.அரசஅதிபர் அவர்கட்கும் மேலதிக அரச அதிபருக்கும், கண்டாவளைப் பிரதேச செயலர் அவர்கட்கும், கிளி.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தரும், ஆரம்ப பயிற்று விற்பாளருமான ப.கனகராசா அவர்கட்கும் கண்டாவளைப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தரும் பயிற்றுவிப்பாளருமான ப. ஆனந்தராசா அவர்கட்கும் ஏனைய பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கும் உமையாள்புரம் கிராம சேவகர் அவர்கட்கும், ஆதவன் கல்வி நிலைய, றோயல் கல்வி நிலைய ஆசிரியர் களுக்கும், பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும், என் சகமாணவர்களுக்கும், இப் பெரிய விருதைப் பெறுவதற்கு வழிகாட்டிய பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டு கழகத் தினருக்கும், என்னை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தி வாழ்ந்த்தும் உறவினர்கள், நண்பர்கள், நண்பிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித் துக் கொள்கின்றேன்.

நன்றி

செல்வி S.விக்ரர் டிவனியா மான்
[MANN]
A/L 2005 COM
கிளி.கிளிநொச்சி ம.வி.

(சி.10967)


### இந். தொடரூந்து சேவைக் கட்டணம் உயராதென அமைச்சர் அறிவிப்பு

(புதுடில்லி)

2004-2005 ஆம் ஆண்டுக்கான தொடரூந்து சேவைக்கான நிதி ஒதுக்கீடு மசோதா பாராளுமன்றத் தின் மக்களவையில் ஏற்கனவே நிறைவேறிவிட்டது.

இந்த மசோதா நேற்று முன் தினம் மேல்- சபையிலும் நிறை வேறியது. இதன் மூலம் இந்த மசோதாவுக்கு பாராளுமன்றத்தின் ஒப்புதல் கிடைத்து விட்டது.

முன்னதாக நேற்று முந்தினம் மசோதா மீது மேல் சபையில் நடந்த விவாதத்துக்கு தொடரூந்து சேவை இலாகா ராஜாங்க அமைச் சர் ஆர். வேலு பதில் அளித்துப் பேசினார். அப்போது அவர் கூறியதாவது, உலகின் மிகப்பெரிய அரசு நிறுவனமான இந்திய தொடரூந்து சேவையில் பல்வேறு பிராந்தியங்களின் மேம்பாட்டுக்கு கூடுதலாக ரூ.24 ஆயிரம் கோடி செலவிட திட்டம் வகுக்கப்பட்டு உள்ளது. பல்வேறு திட்டப் பணி களுக்காக ஒவ்வொரு மண்டலத் துக்கும் ரூபா 20 கோடி ஒதுக்கப் பட்டுள்து. பின் தங்கிய மற்றும் மலைப் பிராந்தியங்களில் தொடரூந்து சேவை திட்ட மேம்பாட் டுக்கு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தொடர்ந்து முன் னுரிமை அளிக்கும.இந்த ஆண்டில் தொடரூந்து பயணிகள் போக்கு வரத்து 5 சதவீதம் உயர்ந்துள்ளது.


## அறிவித்தல்

## தமிழீழ வைப்பகம்

தமிழீழ வைப்பகத்தின் எக்கிளை யிலாவது 01.10.2001 தொடக்கம் 31.12.2002 வரையயான காலப்பகுதியில் (01 வருட கால அடகுக் கடன் சேவை), 01.11.2003 தொடக்கம் 31-01-2004 வரை யான காலப்பகுதியில் (06 மாதகால அடகுக்கடன் சேவை),அடகுக் கடனைப் பெற்று உரிய காலத்தில் அவற்றை மீளச்செலுத்தத் தவறிய கடனாளிகளின் அடகு நகைகளை தமிழீழ வைப்பகம் விற்பனை செய்யத் தீர்மானித்துள் ளது. எனவே உரியவர்கள் 24.12.2004 ஆம் நாளுக்கு முன்னர் அடகுநகைகளை மீட்டுக்கொள்ளுமாறு அல்லது புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறீர்கள்.

மேலாளர்,
ஆளுகைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி.10965)



**கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம், கிளிநொச்சி.**

## பணிநிலை வேண்டுகை

01) பதவி :- கணக்கு எழுதுநர்.
சம்பள அளவுத்திட்டம் 31-99-105-10
சம்பள அளவு 6000/-6000-8100
100தர10-110தர10

வயது 23- 45 வரை

02) தகைமைகள் :-

அ. கூட்டுறவுப் பணியாளர் 11 சம்பள அளவுத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்கு அல்லது கணக் காய்வு எழுதுநர் பதவியில் மூன்று வருடத்துக்கு குறை யாத அனுவபம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12 ஆவது சம்பள அளவுத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்கு அல்லது கணக்காய்வு எழுதுநர் பதவியில் ஆறு வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) ஐக்கிய இராச்சி நிறுவனத்தின் கணக்குப் பதிவாளர் இறுதிப் பரீட்சையில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனத்தில் கணக்கு அல்லது கணக்காய்வுத் துறையில் மேற்பார்வைமட்ட பதவியில் இரண்டு வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் அல் லது ஐக்கியராச்சிய நிறுவனத்தின் கணக்குப் பதிவாளராக இடைநிலைப் பரீட்சையில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்த அல்லது கைத்தொழில் ஸ்தாபனத்தில் கணக்கு அல்லது கணக்காய்வுத்துறையில் மேற்பார்வை மட்டப் பதவியில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) தராதரப் பத்திர சான்றிதழுடன் க.பொ.த. (உயர்தரம்) கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது கைத்தொழில் நிறுவனத்தின் கணக்கு அல்லது கணக்காய்வுத்துறையில் மேற்பார்வை மட்ட பதவியில் நான்கு வருடங்களுக்குக் குறையாத அனுபவமும் பெற்றி ருத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 25-12-2004ஆம் திகதிக்கு முன்பாக தலைவர், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்களின் சமாசம், யாழ். கண்டி வீதி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**தலைவர்,**
கிளி. முல்லை மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் சமாசம்
கிளிநொச்சி.

(சி-10966)

# கால்பந்து அரங்கில் குண்டுப்புரளி;

# 70 ஆயிரம் ரசிகர்கள் அலறிஓட்டம்



ஸ்பெயின் நாட்டில் வெகு பிரபலம் வாய்ந்த ஸ்பானிஷ் லீக் கால்பந்து தொடர் இப்போது நடக்கிறது. முன்னணி கிளப் அணிகளான ரியல்மாட்ரிட், ரியல் சோசிடாட் இடையிலான போட்டி மாட்ரிட் நகரில் உள்ள பிரமாண்டமான சாண்டியாகோ பெர்னபு அரங்கில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்தது. போட்டி விறுவிறுப்பாக நடந்து கொண்டிருந்தது. ரொனால்டோ, மைக்கேல் ஒவன் லூயிஸ் பிகோ உட்பட பல பிரபலங்கள் களத்தில் இருந்தன 1-1 என்ற நிலையில் கோல்களும் போடப்பட்டிருந்தன.

அந்தநேரத்தில், உள்ளூர் நாளிதழ் ஒன்றின் அலுவலகத்துக்கு மர்ம டெலிபோன் அழைப்பு "சாண்டியாகோ பெர்னபு அரங்கில் சக்திவாய்த வெடிகுண்டுகள் பொருத்தப்பட்டிருக்கின்றன. இன்னும் அரைமணி நேரத்தில் குண்டுகள் வெடிக்கும் உங்கள் நிருபர்களை சீக்கிரம் அனுப்புங்கள்..." அவ்வளவு தான் தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்பட்டது.

பதறிப்போன நாளிதழ் நிர்வாகம் விஷயத்தை பொலிசாருக்கு சொல்ல அதிர்ச்சியில் உறைந்து போனார்கள் பொலிசார். காரணம் அரங்கில் அப்போது 70 ஆயிரத்திற்கும் அதிகமான ரசிகர்கள் ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அரை மணிக்குள் அவ்வளவு பேரையும் எப்படி வெளியேற்றுவது உடனடியாக விஷயம் ஆட்ட ரெப்ரிக்கு சொல்லப்பட... போட்டி உடனே நிறுத்தப்பட்டது. வீரர்கள் மைதானத்தில் இருந்து அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர்.

"ரசிகர்கள் அனைவரும் பதட்டப்படாமல் அதேசமயம் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அரங்கை விட்டு வெளியேறுங்கள்" என்றுமெகாஸ் பீக்கர்களில் பொலிசார் உத்தரவிட்டனர். பிரதான வாயில்கள் தவிர அவசர வாயில்கள் அத்தனையும் திறந்து விடப்பட...மைதானத்துக்குள், ஆடுகளத்துக்குள் எல்லாம் புகுந்து அடித்துப் பிடித்து ரசிகர்கள் ஓட்டம் பிடித்தனர். ஒருவழியாக 10 நிமிடங்களில் 70 ஆயிரம் ரசிகர்களும் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர்.

# கிறிஸ்டியானோ ஜீனியர்உடல் பிரேசில் அனுப்பப்பட்டது!



மறைந்த கிறிஸ்டியானோ ஜூனியர் உடல் நேற்று முன்தினம கோவாவில் இருந்து அவரது சொந்த நாடான பிரேசிலுக்கு கொண்டு செல்லப்பட்டது. அப்போது டெம்போஸ் போர்ட்ஸ் கிளப் வீரர்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தி விடைகொடுத்தனர். பெங்களூரில் கடந்த டிசம்பர் 5 இல் பெடரேஷன் கோப்பை கால் ந்து இறுதிப் போட்டி நடந்தது. இதில் டெம்போஸ்போர்ட்ஸ்கிளப் அணி மோகன் பகானை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது. டெம்போவின் வெற்றிக்கு காரணமான பிரேசிலின் கிறிஸ்டியானோ களத்தில் சுருண்டு விழுந்து மரணம் அடைந்தார் இதற்கு மோகன் பகான் கீப்பர் சுப்ரதோ பால்முரட்டுத்தனமாக தடுத்ததே காரணம் என்று கூறப்பட்டது. இதை தொடர்ந்து சுப்ரதோ நடுவர் பாலுசஸ் பெண்ட்செய்யப்பட்டனர்.

இதேவேளை நேற்று முன்தினம் கோவாவில் இருந்து கிறிஸ்டியானோ உடல் மும்பைக்கு வான் மூலம் கொண்டு செல்லப்பட்டது. கோவாவில் கிறிஸ்டியானோ உடல் வைக்கப் பட்டிருந்த பெட்டிக்கு டெம்போ அணியின் கொடி போர்த்தப்பட்டது. வீரர்கள் அனைவரும் அணியின் 'யூனிபாம்' அணிந்து இருந்தனர் பொலிஸ் பாண்ட் வாத்தியங்கள் சோ கீதம் இசைக்க வீரர்கள் டலை எடுத்துச் சென்று வானுக்குள் வைத்த காட்சி பார்த்தவர்களை கண்ணீர் சிந்தவைத்தது. அப்போது பேசிய டெம்போகிளப் அதிகாரி ஒருவர் கிறிஸ்டியானோ வீரர்களுக்கு ஊக்க சக்தியாக விளங்கினார். கால்பந்து விளையாட்டுக்காக வாழ்ந்த இவர் தனது உயிரையும் அர்ப்பணி ள்ளார் வெற்றிக்காக முழுமையாக உழைக்க வேண்டும் என்பதற்கு இவர் சிறந்த முன்னுதாரணமாக இருப்பார் என்று உருக்கத்துடன் பேசினார்.

# இந்தியப் பெண்கள் அணிக்கு மைசூரில் இரண்டாவது தோல்வி

மைசூரில் நடந்த பெண்கள் கிரிக்கெட்டில் இந்திய அணி அவுஸ்திரேலியாவிடம் 3 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

இந்தியா வந்துள்ள அவுஸ்திரேலிய அணி 7 ஒருநாள் போட்டி கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இதில் முதல் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது. இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் மைசூரில் நடந்தது.

முதலில் துடுப்பாட்டம் செய்த இந்திய அணி தொடக்கத்தில் தடுமாறியது. ஆனாலும் அஞ்சு ஜெயின், அஞ்சு சோப்ரா இணைந்து அணியை மீட்டனர். இவர்கள் இரண்டாவது விக்கெட்டுக்கு 101 ஓட்டங்கள் சேர்த்தனர். அஞ்சு 51, சோப்ரா 43 ஓட்டங்கள் எடுத்தனர். இதற்குப் பின் வந்தவர்கள் விரைவாக வெளியேற, இந்திய அணி 50 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 171 ஓட்டங்களே எடுக்க முடிந்தது.

இதற்குப் பதிலளித்தாடிய அவுஸ்திரேலிய அணிக்குத் துணை கப்டன் கரேன்ரோல்டன், லிசா சிதேல்கர் கை கொடுத்தனர். இறுதியில் அவுஸ்திரேலிய அணி 49.2 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 172 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. கரேன் 62 ஓட்டங்களுடன் கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். சிதேல்கர் 30 ஓட்டங்கள் எடுத்தார். இந்த வெற்றியை அடுத்து அவுஸ்திரேலியா தொடரில் 2.0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. இத் தொடரின் மூன்றாவது போட்டி வரும் 16 இல் மும்பையில் நடக்கிறது.

# அடுத்த போட்டிகளி இளம் வீரர்களுக்கு வா ப்பு

## இந்திய அணித்தலைவர்



வங்கதேசத்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் சிட்டகாங் நகரில் வியாழக்கிழமை தொடங்குகிறது இந்தப் போட்டி அதைத் தொடர்ந்து வரும் மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடருக்கான இந்திய அணியில் இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும் என்று தெரிகிறது.

"இளம் புதுமுக வீரர்கள் நிறையப் பேர் அணியில் இருக்கிறார்கள் சிட்டகாங் டெஸ்ட். அதைத் தொடர்ந்து வரும் ஒரு நாள் தொடர்களில் அவர்களுக்கு வாய்ப்பளித்துப் பார்க்க வேண்டும் என்று ஒரு எண்ணம் என் மனதில் இருக்கிறது. இன்னும் உறுதியான முடிவு எதுவும் எடுக்கவில்லை. பரிசீலித்த பிறகு சொல்கிறேன்" என்கிறார் கப்டன் சவுரவ் கங்குலி.

### பிரேத பரிசேதனை அறிக்கை

# கிறிஸ்டியானோவின் மனைவி ஏற்பதற்கு மறுப்பு




(பொங்களூர்)

பிரேசில் வீரர் கிரிஸ்டியானோவின் மரணம் தொடர்பான பிரேத பரிசேதனை அறிக்கையை அவரது மனைவி மறுத்துள்ளார்.

பொங்களூர் அரசு விக்டோரிய வைத்தியசாலை வெளியிட்ட பிரேத பரிசோதனை அறிக்கைப்படி கிறிஸ்டியானோ மாரடைப்பால் மரணம் அடைந்ததாக கூறப்பட்டது களத்தில் கடுமையாக உழைத்தது அதிகமாக பதட்டம் அடைந்ததால் மாரடைப்பு ஏற்பட்டது என்றும் விளக்கம் அளிக்கப்பட்டது. இதனை ஏற்க மறுத்த கிறிஸ்டியானோவின் மனைவி ஜூலியானா இரண்டாவது பிரேத பரிசோதனை நடத்த வேண்டும் என்று கோவா மாநில அரசை கேட்டுக் கொண்டார் இதை ஏற்க அரசு மறுத்துவிட்டது. இதே கோரிக்கையை கர்நாடக அரசிடம் முன் வைக்க விரும்பாத ஜூலியானா, கணவரின் உடலை பிரேசிலுக்கு கொண்டு செல்ல முடிவு செய்தார்.

# சிறந்த கார் பந்தய அணியாக புரூனே நாட்டு அணி தெரிவு

ஆசியன் அமைப்பு நாடுகளையும் இந்திய மக்களையும் உறவு ரீதியில் இணைக்கும் வகையில் நடந்த கார்பந்தயம் நேற்று முன்தினம் முடிவடைந்தது. சிறந்த அணியாக புரூனே நாட்டு அணி தேர்வு செய்யப்பட்டது. 8ஆயிரம் கி.மீ. தொலைவுக்கு 20 நாட்களாக இந்தப் போட்டி நடந்தது. இந்தக் கார்பந்தயத்தை அசாம் மாநிலம் கவுஹாத்தியில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் நவம்பர் 23ஆம் திகதி தொடக்கி வைத்தார். இந்தோனேசியாவின் பட்டம் நகரில் இந்தக் கார் பந்தயம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முடிவடைந்தது.

# இந்திய டெஸ்ட் அணியில் மீண்டும் இடம்பிடிப்பேன்


யுவராஜ்சிங்

டெஸ்ட் அணியில் மீண்டும் இடம்பெறுவேன் என்று இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி வீரர் யுவராஜ் சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான யுவராஜ்சிங் பாகிஸ்தானுக்கு எதிராக கடந்த ஏப்ரல் மாதம் லாகூரில் நடந்த டெஸ்டில் சதம் அடித்த போதும் அவர் தற்பொழுது டெஸ்ட் அணியில் இல்லை.

அவுஸ்திரேலிய அணி இந்தியா வந்து பெங்களூரில் நடந்த முதல் டெஸ்டில் விளையாடினார். சென்னையில் நடந்த 2ஆவது டெஸ்டில் தொடக்க வீரராக ஆடினார். சென்னை டெஸ்டில் சரியாக ஆடாத தால் நாக்பூரில் நடந்த 3ஆவது டெஸ்டில் 11 பேர் கொண்ட அணியில் வாய்ப்பு கிடைக்கவில்லை. மும்பையில் நடந்த 4ஆவது டெஸ்ட் போட்டிக்கான அணியில் இருந்து நீக்கப்பட்டார்.

அதைத் தொடர்ந்து தென்னாபிரிக்கா தொடர் மற்றும் வங்காளதேஷ் தொடரில் இருந்து தொடர்ந்து நீக்கப்பட்டார். இந்நிலையில், டெஸ்ட் அணியில் மீண்டும் இடம்பெறுவேன என்று யுவராஜ்சிங் கூறியுள்ளார். தமிழ்நாடு-பஞ்சாப் அணிகள் இடையேயான ரஞ்சிடிராபி போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில நடந்து வருகிறது. பஞ்சாப் அணிக்காக விளையாடிவரும் அவர் இது தொடர்பாக கூறியதாவது;

சர்வதேச போட்டிகளில் விளையாடிய நான் ரஞ்சிடிராபியில் ஆடுவது சற்று வித்தியாசமானது. ஒவ்வொரு போட்டியும் வெவ்வேறு விதமானதுதான்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான சென்னை டெஸ்டில் தொடக்க வீரராக விளையாடினேன். ஒரே இன்னிங்சில் மட்டும் வாய்ப்பு கிடைத்தது. ஒரு ஆட்டத்தில் வாய்ப்பு கொடுத்து சரியாக ஆடாததற்காக என்னை நீக்கி இருக்கிறார்கள். இது எனக்கு மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. டெஸ்ட் அணியில் மீண்டும் இடம்பெற என்னை தகுதியுடையவன் ஆக்கிக்கொள்வேன்.

நாக்பூர் டெஸ்டில் விளையாடுவேன் என்று எதிர்பார்த்தேன். ஆனால், என்னை நீக்கியது வேதனை அளித்தது. விளையாட்டில் அணியில் இடம்பெறுதல், நீக்குதல் என்பது சகஜம்தான் டெஸ்ட் அணியில் மீண்டும் இடம்பெறுவேன் என்ற நம்பிக்கை உள்ளது; என்றார்.

# சர்வதேச கிரிக்கெட்கவுன்சில் தலைமையகம் இடம்மாறுகிறது

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) தலைமை அலுவலகம் லண்டனில் இருக்கிறது. பிரிட்டன் அரசு ஐ.சி.சி.க்கு வரிச்சலுகை அளிக்க மறுத்து விட்டது. இது சம்பந்தமாக பிரிட்டன் விளையாட்டுத் துறை அமைச்சகத்துடன் ஐ.சி.சி. நிர்வாகிகள் நடத்திய பேச்சு வார்த்தை யில் பலன் எதுவுமில்லை. ஆகவே, லண்டனில் இருந்து வேறு இடத்துக்கு ஜாகையை மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

"பிரிட்டன் அரசு எங்களுக்கு வரிச்சலுகை மறுத்து விட்டது என்ற தகவல் வந்திருக்கிறது. இது எங்களை மிகுந்த ஏமாற்றமடையச் செய்கிறது. இவ்வார இறுதியில் அவசரக் கூட்டம் நடத்தி, அடுத்தகட்ட நடவடிக்கை பற்றி முடிவெடுப்போம்." என்கிறார் ஐ.சி.சி. தலைவர் ஈஷான்மானி ஐ.சி.சி. தலைமையகம் அனேகமாக டுபாய் அல்லது மலேசியா பகுதிக்குமாற அதிக வாய்ப்புக்கள் உள்ளதாக, அந்த அமைப்பு நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.



## சிந்தனைக்கு

எந்த ஒரு விடுதலை இயக்கமும் தனியாக நின்று, மக்களுக்குப்புறம்பாக நின்று விடுதலையை வென்றெடுத்ததாக வரலாறு இல்லை; அது நடைமுறைச் சாத்தியமான காரியமுமல்ல.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்.
யாழ்.சாலை,கிளிநொச்சி. 15-12-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@eezhanatham.com

## சமாதானத்திற்கு எதிரானது

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு உலங்குவானூர்திகள் செல்வதற்கு அனுமதிப்பதில்லை என்ற அரசாங்கத்தின் முடிவு ஏதோ விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளது போன்றதொரு தொனியில் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சுத் தரப்பினரால் அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு தீர்மானம் மேற்கொண்டமைக்கு வான்புலிகள் தொடர்பான புதிய தகவல்களை நோர்வே தரப்பும், கண்காணிப்புக் குழுத் தரப்பும் தமக்கு வழங்கவில்லை என்ற சீற்றமே காரணம் என சில தகவல்கள் வெளியாகியுள்ளன. அதாவது இரணைமடுக்காட்டு பகுதியில் விடுதலைப்புலிகள் விமான ஓடுதளம் ஒன்றையும், விமானங்கள் ஏறி இறங்குவதற்கான வசதிகளையும் செய்து கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கும் அரசாங்கம் இது குறித்து தகவல்களை அரசாங்கத்திற்கு நோர்வே தரப்பும், கண்காணிப்புக் குழுவும் வழங்கவில்லை என்பதே குற்றச்சாட்டாகும்.

ஆனால், சிறிலங்கா அரசாங்கம், இவ்வாறு சீற்றம் கொள்வதென்பது புலிகளுக்கோ அன்றி நோர்வே தரப்பிற்கோ எதிரானதல்ல. இது சமாதானத்திற்கு மட்டுமே எதிரானதாகும். ஏனெனில், விமான ஓடு தளம் அமைக்கப்பட்டுள்ளதே இல்லையோ விமான ஓடுதளம் பற்றிய தகவல்களையோ, அன்றி புலிகளின் ஆயுத பலம், பலவீனத்தை அரசாங்கத்திற்கு வெளிப்படுத்தும் கடப்பாடோ நோர்வே தரப்பிற்கோ கண்காணிப்புக் குழுவிற்கோ இல்லை. இது யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு உட்பட்ட விடயமும் அல்ல.

யுத்த நிறுத்த உடன்பாட்டு விதிகள் எதிலும் தமது படையணிகளையோ ஆயுத தளபாடங்களையோ இரு தரப்பும் பெருக்கிக் கொள்வதற்கும் தடை எதுவும் இல்லை. இதனை முழு அளவில் பயன்படுத்தி சிறிலங்கா அரசு தனது ஆயுத பலத்தைப் பல மடங்கு பெருக்கிக் கொண்டுள்ளது என்பதும் நிராகரிப்பதற்கு இல்லை.

இதனைத் தவிர விடுதலைப்புலிகளின் இராணுவ பலத்தை அறிய முனைவதோ அன்றி அதனை பற்றித் தகவல் திரட்ட முனைவதோ அன்றி அதனை சிறிலங்கா அரசு உட்பட்ட வேறு யாருக்காவதோ வழங்க முற்படுதல் என்பதோ நோர்வேயின் சமாதானப் பணியாகவும் இருக்கமாட்டது. யுத்த நிறுத்தக் கண்காணிப்புப் பணியாகவும் இருக்கமாட்டாது. இது உளவு நடவடிக்கைகளாகவே இருக்கும்.

ஆகையினால், அரசாங்கத்தின் குற்றச்சாட்டானது அர்த்தமற்றதொன்றாகும். அதேசமயம், சமாதான நடவடிக கைக்கு எதிரான நடவடிக்கையாகும். விடுதலைப்புலிகளைப் பொறுத்து உலங்குவானூர்தி என்பது அத்தியாவசியமானதாக இருந்ததில்லை. சமாதான முயற்சிகளை விரைவுபடுத்தும் நோக்கில் கிடைத்த சந்தர்ப்பத்தைப் புலிகள் பயன்படுத்திக் கொண்டனரே ஒழிய கட்டாயமான தேவையாக இருந்ததில்லை.

விடுதலைப்புலிகள் வெளிநாடுகளின் பயணத்தின்போதும், சிலவேளைகளில் வடக்கிற்கும், கிழக்கிற்குமான பயணத்தின்போதும் உலங்குவானூர்திகளைப் பயன்படுத்தியுள்ளனர். ஆனால், உலங்குவானூர்தி பயன்படுத்தாமையால் புலிகளின் எந்தப் பணியும், எவ்வேளையிலும் தடைப்பட்டதில்லை/தடைப்படமாட்டாது இது சிறிலங்கா அரசிற்கும் சனாதிபதி சந்திரிகாவுக்கும் நன்கே தெரியும். புலிகள் வசதிக்காகக் காத்திருப்பின் சாதனைக்குரியவா களாக மாறியிருக்க முடியாது.

ஆனால், சமாதான முயற்சிகளில் ஏற்பாட்டாளராகச் செயற்படும் நோர்வே தரப்பிற்கும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கும், இத்தகைய தடைகளை இடுவதானது ஒருபுறத்தில் அவர்களை அவமானப்படுத்துவது போன்றது. மறுபுறத்தில் அவர்கள் தமது பணிகளை சீக்கிரமாக மேற்கொள்வதற்கு தடங்கலாக அமையக்கூடியது.

சிறிலங்கா அரசு ஏற்கனவே நோர்வேத் தரப்பை இழிவுபடுத்தும் வகையில் பல தடவைகள் நடந்து கொண்டுள்ளது. தற்போதைய தீர்மானம் மேலும் அதை வலியுறுத்துவதாகவே அமையத்தக்கதாகும். மேலும் சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசாங்கம் இடையூறுகளை ஏற்கனவே தோற்றுவித்துள்ளது. இந்நிலையில், மீண்டும் ஒரு தடவை நோர்வேத் தரப்பிற்கு அவமானத்தை ஏற்படுத்துவதாகவும், இடையூறைத் தோற்றுவிக்கும் நடவடிக்கையாகவுமே நோர்வே தரப்பினருக்கு உலங்குவானூர்தி அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை உள்ளது. ஆகையினால் பாதுகாப்பு அமைச்சின் இந்நடவடிக்கையானது ஏற்கனவே தொய்ந்துபோயுள்ள சமாதான முயற்சிகளை மேலும் பலவீனப்படுத்துமே ஒழிய புலிகளைப் பலவீனப்படுத்திவிடப் போவதில்லை.

## லெப்.கேணல் மறவனுக்கு அஞ்சலி செலுத்தி பேசாலை மீனவர் கூ.சங்கம் கண்ணீர் மடல்

விடுதலைப்புலிகளின் மூத்தளபதி லெப்டினன்ட் கேணல் மறவன் மாஸ்டர் அவர்களின் மறைவை முன்னிட்டு பேசாலை மீனவர் கூட்டுறவு சங்கம் கண்ணீர் மடல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதில் குறிப்பிட்டுள்ளதாவது மூத்த தளபதிலெப்டினனட் கேணல் மறவன் மாஸ்டரின் மறைவு எமக்கு ஆழ்ந்தகவலையை தருகிறது.

இவர் மன்னார் மாவட்ட மீனவ சங்கங்களின் பிரச்சினையைத் தீர்க்கவும் வளர்ச்சிக்கும் பலவிழிப் புணர்வை ஏற்படுத்தியவர் மீனவர் சங்கங் களின் நலன் கருதி வடக்கிலும் கிழக்கிலும் செயற்பட்டு வந்த வராவர். இரவது மறை வினால் துயருற்றிருக்கும் இவரது உற்றா,உறவினர் நண்பர்கள் விடுதலைப புலிகளுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தையும்தெரிவிக்கி றோம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (மி)

## பிற்போடல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தில் இன்று பகல் 10.00 மணிக்கு நடைபெறவிருந்த மாவட்ட விவசாயக்குழுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணமாக நடைபெற மாட்டாதென கிளி.மாவட்ட அரசஅதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

மேற்படி கூட்டம் எதிர்வரும் 2_ஆம் திகதி நடைபெறவுள்ளதெனவும், அன்றைய தினம் சகல அங்கத்த வர்களையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் வேண்டியுள்ளனர் (சோ)

## மாணவி மீதான பாலியல்வல்லுறவு குற்றவாளிக்கு 10 வருட கடுழியச் சிறை

மட்டக்களப்பு மகிழூரில் 1999ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி 15 வயது மாணவி ஒருவர் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத் தப்பட்டமை தொடர்பான வழக்கில் குற்றவாளிக்கு நீதிமன்றம் 10 வருட கடுழிய சிறைத் தண்டனையுடன் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா நஸ்டஈடும் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்று வந்தது. எதிரி இல்லாமலே எதிரியான சிவகுரு சிவகுமார் என்பவரை நீதிமன்றம் குற்றவாளியாக கண்டு இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது. மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுப்ரமணியம் பரமராஜா இந்த தீர்ப்பை வழங்கியுள்ளார். குற்றவாளி தலைமறைவாக இருப்பதால் அவருக்கு எதிராக பகிரங்க பிடியாணை உத்தரவை பிறப்பித்த நீதிபதி, அதன் பிரதிகளை களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி மற்றும் சிரேஸ்ட பொ லிஸ் அத்தியட்சகருக்கும் அனுப்பி வைக்குமாறு பதிவாளருக்கு உத்தர விட்டார். அத்தோடு குற்றவாளிக்கு ரூபா 5 ஆயிரம் தண்டப்பணமும் விதிக்கப்பட்டுள்ளது.

## -வெள்ளப்பெருக்கு காரணமாக- பரீட்சைக்கு பாதிப்பு ஏற்படின் வேறொருதினத்தில் நடைபெறும்

(கொழும்பு)

வெள்ளப்பெருக்குக் காரணமாக எவரேனும் மாணவர் ஒருவருக்குப் பரீட்சைக்குத் தோற்ற முடியாமல் போனால் அவர்களுக்காகப் பிறிதொரு தினத்தில் பரீட்சை நடத்தப் படுமென பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.இது தொடர்பாக பரீட்சைத்திணைக்களம் அறிவிக்கையில் தற்போது பெய்துவரும் கடும் மழையினால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கினால் தற்போது நடைபெற்றுவரும் கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைக்கு இடையூறு ஏற்பட்டால் குறிப்பிட்ட பிரதேசங்களில் மாணவர்களால் தோற்றமுடியாமல் போகும் பாடங்களுக்காக பிறிதொருதினத்தில் பரீசைகள் நடத்தப்படும் எனஅறிவித்துள்ளார். இதேவேளை இதுவரை வெள்ளப் பாதிப்பால் பரீட்சைக்கு இடையூறுகள் ஏற்பட்டதாக அப்பிரதேசத்திலிருந்தும் அறிவிக்கப்படவில்லை என பரீட்சை ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

## கொழும்பு குண்டு வெடிப்பினால் இந்திய சுற்றுலா பயணிகள் வருகை நிறுத்தம்

இந்தியத் திரையுலக நட்சத்திரங்கள் கலந்துகொண்ட கலை நிகழ்ச்சியில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவிருந்த இந்திய உல்லாசப் பயணிகள் பலர் தமது சுற்றுலாவை இரத்து செய்துள்ளனர்.

இந்திய உல்லாசப் பயண முகவர்கள் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், "நடிகர் ஷாருக்கான் கலந்துகொண்ட நிகழ்வில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் உல்லாசப் பயணிகளின் திட்டத்தையும் பயணத்தையும் பாதித்துள்ளது. உல்லாசப் பயணிகளின் வருகைக்கு ஏதுவான நாடாக இலங்கை படிப்படியாக வளர்ச்சிகண்டு உறுதியான தகுதியைப் பெற்றுக் கொள்ளவிருந்த தறுவாயில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதனால் இலங்கையின் உல்லாசப் பயணத்துறைக்கு இனி பாரிய தாக்கம் ஏற்பட வாய்ப்புண்டு."- என்று கூறியுள்ளார். இலங்கையின் உல்லாசத்துறைக்கு அதிகவருமானம் ஈட்டித்தரும் நாடுகளின் வரிசையில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் வரை சுமார் 82 ஆயிரம் இந்திய உல்லாசப் பயணிகள் இலங்கைக்குச் சுற்றுலா வந்துள்ளனர். இந்தத் தொகை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12.5 வீத அதிகரிப்பு என்று சுற்றுலாத்துறை அமைச்சு புள்ளி விபரங்களை மேற்கோள் காட்டியுள்ளது. இதே வேளை, கலை நிகழ்ச்சியில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச்சம்பவம் உலகெங்கும் உள்ள ஊடகங்களில எதிரொலிக்கும் செய்திகள் இலங்கை தொடர்பாக எதிர்மறையான எண்ணத்தை உண்டாக்கி வருவதால், ஏனைய நாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையும் குறைவடையச் சாத்தியங்கள் உண்டு என்று சுற்றுலா அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## புவியியல்,குடியியல், வரலாறு பாடத்திற்கான அறிமுகச் செயலமர்வு

(கண்டாவளை)

வடக்கு- கிழக்கு மாகாண பாடசாலைகளில் 2005 ஆம் ஆண் டில் தரம்-7 தொடக்கம்தரம்-11 வரையான வகுப்புகளில் சமூகக்கல் வியும், வரலாறு என்ற பாடத்திற்கு பதிலாக புவியியல், குடியியல், வரலாறு என்ற பாடம் அறிமுகம் செய்யப் படுகிறது. இப்பாட அறிமுகம் செயலமர்வு இன்று முதல் 17 ஆம் திகதி வரையான மூன்று நாட்களும் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது. இதில் வடமாகாணத்தை சேர்ந்த சகலவலயங்களினதும் வலய கல்விப் பணிப்பாளர்கள், பிரதி கல்விப் பணிப்பாளர்கள், சமூகக் கல்வி ஆசிரிய ஆலோ சகர் கள் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு மாகாண கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (14)

## மழையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சர்வதேச நிறுவனங்கள் உதவ வில்லை

### —யாழ்.அ.சா.நி. இணையத்தலைவர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்- குடாநாட்டில் பெய்துவரும் தொடர் மழை காரணமாகவும் அதனால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குகள் காரணமாகவும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கவோ, நிவாரணங்களை வழங்கவோ எந்த ஒரு சர்வதேச தொண்டர் அமைப்புக்களும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் ஸ்ரீ சக்திவேல் குற்றம் சாட்டியுள்ளார்.அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டில் அடைமழை பெய்து வருகிறது. இதனால் சுமார் 5 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் ஏற்பட்டிருக்கும் வெள்ளம் காரணமாக ஏராளமான குடும்பங்கள் குடிபெயர்ந்துள்ளனர். இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் பெரும்பாலும் இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பின்னரும்தம் செந்தஇடங்களில் மீளக்குடியமர முடியது தற்காலிக வாழ்விடங்களில் வாழ்ந்து வருவோரே என சுட்டிக்காட்டியுள்ள சக்திவேல்.மழை, வெள்ளம் காரணமாக பதிப்படைந்துள்ள குடும்பங் களுக்கு உதவ சர்வதேச தொண்டர் அமைப்புக்கள் முன்வராமை குறித்து விசனமும் தெரிவித்துள்ளார். (33)

# எஸ்.பி.திஸாநாயக்கவை விடுவிக்கக்கோரி

# இன்று முதல் அரச எதிர்ப்புப் போராட்டம்

உயர் நீதிமன்றின் தீர்ப்பிற்கமைய சிறைவாசம் அனுபவிக்கும் ஐக்கிதேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி திஸாநாயக்கவை விடுவிக்க இன்றுமுதல் நாடுபூராகவும் பல அரச எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம் பெறவுள்ளதாக ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார். நாடுபூராகவும் சர்வமதப் பிரார்த்தனை சுவரொட்டிப் போராட்டம் மக்கள் ஊர்வலம் எனப் பல போராட்டங்கள் ஆரம்பிக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் இன்று ஹெங்குரான் கெத்தவில் இருந்து கொழும்பு நோக்கி ஆரம்பிக்கும் ஊர்வலத்தில் 200 தாய்மார்களும் 200 பெண்களும் கலந்து கொள்ளவுள்ளனர். இவர்கள் கொழும்பு நோக்கிப் பயணிக்கும் இந்தப் போராட்டத்தினிடையே வழி நெடுகிலும் அனைத்து ஆலயங்களிலும், பிரார்த்தனைகளிலும் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் இவர்களுடன் விளையாட்டுத் துறையினர், கலைஞர்கள் எனப் பலதரப்பட்டவர்கள் ஒன்று கூடி அரச எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடுவர் எனக் கலாநிதி ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.அத்துடன் அனைத்து இன மக்கள் மத்தியிலும் கையொப்பம் திரட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.(32)

### தொடரும்...

கப்படுகின்றனர். இதேவேளை, பொதிகள், உந்துருளிகள், துவிச்சக்கர வண்டிகள் என்பன உழவு இயந்திரம் மூலம் ஏற்றி இறக்கப்படுகிறது. இந்நிலையில் கோஸ்வே ஊடான பாய்கின்ற நீரின் அளவு வெகுவாக அதிகரித்து வருகிறதால் அதனூடான போக்குவரத்து மேலும் நெருக்கடி நிலையை எட்டியிருப்பதாகக் கூறப்படுகிறது.

புளியம்பொக்கணைச் சந்தியில் இருந்து கண்டாவளை சந்திவரை பேருந்துக்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், பயணிகள் கொட்டும் மழையின் மத்தியில் நீண்ட தூரம் கால் நடையாகவே சென்று தமது பயணத்தைத் தொடர வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி 5 அடி வான்பகுதியிலும் பெருமளவான வெள்ளம் பாய்கின்றது. இப்பாதையூடாகச் செல்கின்ற பயணிகளை தமிழர் புனர்வாழ்வுக்கழகம், கரைச்சிப் பிரதேச செயலகம் ஆகியவற்றின் உழவு இந்தியரங்கள் மூலம் ஏற்றி இறக்கப்பட்டு வருகின்றனர். வெள்ளப் பாதிப்பு நிறைந்துள்ள வீதிகளில் தமிழீழக் காவல்துறையினர் பாதுகாப்பு மற்றும் வீதி ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, கண்டாவளை பிரதான வீதியும், வெள்ளம் காரணமாக அப்பகுதிக்கான பேருந்து சேவையும், வெலிக்கண்டல் சந்தியுடன் மட்டும் சேவை நடைபெறுகிறது. இதேவேளை, விசுவமடு பிரமந்தனாறு வீதி, சுண்டிக்குளம் வீதி, புளியம் பொக்கணை - வட்டக்கச்சி வீதி ஆகிய வீதிகள் வெள்ளம் காரணமாக வாகனப் போக்குவரத்து செய்ய முடியாது துண்டிக்கப்பட்டுள்ளன. இதனால் மக்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர். இதேவேளை, இரணைமடு குளத்தின் வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளதால் முரசுமோட்டை, கண்டாவளை, பெரியகுளம், பன்னங்கண்டி பகுதி நெல் வயல்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. அத்துடன் கண்டாவளை கனகராயன் ஆற்றுப்படுக்கையில் உள்ள மக்கள் குடியிருப்பு, தருமபுரம் மாலிகா குடியிருப்பு, தருமபுரம், பிரமந்தனாறு, குமரபுரம், கோரக்கன்கட்டு, கல்லாறு, சாந்தா குடியிருப்பு, நாதன் குடியிருப்பு போன்ற மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் பெருமளவு வீடுகள் நீர் புகுந்தும், ஈரலிப்பு காரணமாக சுவர்கள் இடிந்து வீழ்ந்துள்ளன. இதனால் மக்கள் வசிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அக்கராயன் கோணாவில் வீதியில் வெள்ளம் தொடர்ந்து பாய்ந்து வருவதுடன் பல கிராமங்களில் வீடுகளின் நாற்புறமும் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளமையின் காரணமாக அக்கராயன் பிரதேச அரசியல்துறை மற்றும் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தினர் பொதுமக்கள் இணைந்து வெள்ளத்தால் சூழப்பெற்ற மக்களை காப்பாற்றும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதுடன் போக்குவரத்து மேற்கொள்ள முடியாது அதிக வெள்ளம் பாயும் இடங்களில் படகு சேவையினையும் மேற்கொண்டு வருகின்றனர்.

மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரச செயல்கத்தினை அண்டிய பகுதிகளில் வெள்ளம் காரணமாக பல வீடுகளின் சுவர்கள் இடிந்து விழுந்துள்ளதுடன் உடமைகளும் சேதத்திற்குள்ளாகியுள்ளது.

வீட்டினுள் வெள்ளம் புகுவதை அவதானித்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியமையின் காரணமாக மக்கள் எவ்வித பாதிப்பிற்கும் ஆளாகாமல் பாதுகாக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரணைமடுக்குளத்தில் வான் கதவுகள் திறக்கப்பட்டதன் காரணமாக வட்டக்கச்சி பன்னங்கண்டிப் பகுதியில் அதிக அளவு நீர் பாய்வதால் மக்கள் இடம்பெயரமுடியாமல் வீட்டின் உள்ளேயே இருந்த நிலை வட்டக்கச்சி அரசியல்துறையினர் வட்டக்கச்சி பொருண்மியம், கரைச்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், தமிழீழ சுகாதார சேவைகள், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆகிய வற்றைச்சேர்ந்தோர் இணைந்து நீந்திச் சென்று மக்களையும், உடமைகளையும் காப்பற்றி வருகின்றனர். காப்பற்றப்படும் மக்களை இராமநாதபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் உழவு இயந்திரத்தில் ஏற்றிக் கொண்டு போய் விடப்பட்டு வருகின்றனர்.

(சோ, லோ, தீ, 14, 12)

### உலங்கு....

படுத்துவது ஆபத்தானது எனத் தாம் கருதுவதாக தெரிவித்த அவர் பாதுகாப்பு அமைச்சுடனும் இந்தத் தீர்மானம் தொடர்பாக பேசப்பட்டு இணக்கமும் பெறப்பட்டது என்றும் தெரிவித்தார். இதேவேளை ரஷ்ய வான்பரப்பில் அத்துமீறி சென்றதாக குற்றம் சாட்டப்பட்டு இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான இரு விமானங்கள் தடுத்து வைக்கப்பட்டதாக ஊடகங்களில் வெளியான செய்திகள் குறித்து கருத்து தெரிவித்த அவர் இது ஒரு தொழில் நுட்ப ரீதியான பிரச்சினை எனக் குறிப்பிட்டதோடு தமது பயணத்தின் போது ரஷ்ய மற்றும் உக்ரையின் வான்பரப்பில் பறக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது எனவும் இது விமானப்படைக்குச் சொந்தமான விமானம் என்பதால் தனியான நடைமுறையைக் கையாளவேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் தெரிவித்தார். எப்படி இருந்த போதிலும் தமது விமானங்கள் தடுத்து வைக்கப்படவில்லை என்பதை வலியுறுத்திய அவர் இது விமானப்படையின் விமானம் என்பதால் ரஷ்ய பாதுகாப்புப் படையின் அனுமதியைப் பெறவேண்டியதனாலும் விடுமுறை தினம் மற்றும் இரவில் பயணித்தமைகாரணமாக அங்கு தரித்து நிற்கவேண்டி ஏற்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். (32)

### சிப்பாய்....

கொழும்புத்துறை கரை யோரப்பகுதியிலுள்ள இராணுவ முகாமினில் கடமையாற்றிய இச்சிப்பாய் தங்கியிருந்த அறைப்பகுதியினுள் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் துப்பாக்கி வேட்டுச்சத்தம் கேட்டதாக கூறப்படுகின்றது. இதையடுத்து சக படைவீரர்கள் விரைந்து சென்றவேளையில் காலின் கீழாகவைத்து இயக்கப் பட்டதாக நம்பப்படும் ரி 56 ரக துப்பாக்கி ஒன்று சடலத்தின் கீழ் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையத்திற்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து பொலிசார் விசாரணைகளை ஆரம்பித் துள்ளனர்.

இதனிடையே சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த யாழ். மேலதிய நீதவான் திருமதி. ஸ்ரீநிதி நந்தசேகரன் மரணவிசாரணை களை மேற்கொண்டதுடன்சடலத்தை கொழும்பு பிரதான வைத்திய சாலையில் பாரப்படுத்தி பிரேத பரிசோதனை அறிக்கையினை சமர்ப்பிக்க பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

### கொழும்பில்....

சந்தித்து உரையாடியுள்ளார்.

இதேவேளை நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சூல்கெய்ம் சிறிலங்கா வான்படை உலங்கு வானூர்தி மூலம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்திற்கு இன்று அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் எனப் பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

# பஞ்சாப்பில் இரு தொடருந்துகள் நேருக்குநேர் மோதியதில் 28 பேர் பலி

(புதுடில்லி)

பஞ்சாப்பில் இரண்டு தொடருந்துகள் நேருக்கு நேர் மோதி கோர விபத்துக்குள்ளானதில் இரண்டு தொடருந்து ஓட்டுனர்கள் உட்பட இருபத்தெட்டுப் பேர் கொல்லப்பட்டதுடன் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளன.

பஞ்சாப் போசாபூர் பதாம் கூட மற்றும் ஜலந்தர் நகரங்களுக்கிடையிலான தொடருந்து தளத்திலேயே நேற்று நண்பகல் 11.40 மணியளவில் இந்தக் கோர விபத்து நடந்துள்ளது.

இதன்போது இரண்டு தொடருந்துகளிகலும் முதல் மூன்று பெட்டிகள் கடுமையாகச் சேதமடைந்துள்ளன.

# க.பொ.த [சா/த] பரீட்சை

# நடத்த முடியாத நிலை ஏற்படவில்லை

## -கிளி.வலயக்கல்விப்பணிப்பாளர்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை பெய்துவந்துள்ள மழை காரணமாக எந்த ஒரு பரீட்சை நிலையத்திலும் பரீட்சை நடத்த முடியாதநிலை ஏற்படவில்லை எனக் கிளி. வலயக்கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 31 நிலையங்களில் பரீட்சை நடைபெறுகிறது. ஆனால் நேற்றும் நேற்று முன்தினம் பெய்த கடும்மழை காரணமாக எந்த நிலையமும் மோசமாக பாதிக்கப்படவில்லை. பூநகரி வேரவில் பரீட்சை நிலையத்திற்கு வினாத் தாள்களை எடுத்துச்செல்வதில் பிரச்சினைகள் ஏற்பட்டது. ஆனாலும் நேற்றுவரை பரீட்சையை சரியான முறையில் நடத்தியிருக்கிறோம். தொடர்ந்து மழை பெய்யுமானால் வேரவில், முழங்காவில் பகுதி நியைங்களுக்கு செல்லும் பரீட்சார்த்திகளை ஒழுங்குபடுத்தி பரீட்சைக்கு அனுப்புவதற்கு பூநகரி பிரதேச செயலகம் படகுச் சேவையை நடத்த தயாராக இருக்கிறது. எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ,தீ)

### வெள்ளத்தால்...

கொண்டன. இதன்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து துரிதகதியில் செயற்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கான செயலணிக்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.(ச,கு)

### ஹெல....

வரை சபாநாயகராக்க ஐ.தே.க முயன்று வருகிறது.

இவைதவிர எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சபாநாயகர் லொக்குபண்டார ஆகியோர் ஹொங்ஹொங் சென்றுள்ளனர். எனினும் அவர்களின் விஜயம் குறித்த நோக்கம் தெரியவில்லை. இவை தவிர பிரதம நீதியரசர் சரத் என் சில்வா மாநாடு ஒன்றுக்காக ஹொங்ஹொங் சென்றுள்ளதால் அவருக்கு பதிலாக நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க பதில் பிரதம நீதியரசராக இரண்டு வாரங்களுக்கு பதவி வகிக்கவுள்ளார். (32)

# வீரவணக்கம்

மண் மடியில் 06 - 12 - 1936



மனக் குழியில் 11 - 12 - 2004

கடற்புலிகளின் மூத்த உறுப்பினரும்
கடற்தொழிலாளர் சங்க சமாசங்களின் மேலாளருமான

## லெப்.கேணல் மறவன் மாஸ்ரர்

(எலியாஸ்பிள்ளை ஸ்ரனிஸ்லோஸ்-தாளையடி -வடமராட்சி கிழக்கு)

கடற்புலிகளின் மூத்த உறுப்பினரும், பல கூத்துக்களையும் எழுதி இயக்கி, நடித்து தமது இறுதி மூச்சுவரை நாடக்க கலைத்துறையினருக்கு உரமூட்டி வளர்த்தவருமாகிய லெப். கேணல் மறவன் மாஸ்ரர் அவர்களுக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(சி-10968) - தமிழீழ நுண்கலைக்கல்லூரியினர்.

# சாவு அறிவித்தல்



## கதிரவேலு ஆனந்தராசா

(பிள்ளையார்ஸ்ரோர்ஸ்-உரிமையாளர்)

காரைநகர் கோவளத்தைச் சொந்த முகவரியாகவும் 156 ஆம் கட்டை தொண்டமான் நகரைவசிப்பிடமாகவும் கொண்ட திரு.கதிரவேலு ஆனந்தராசா அவர்கள் 14.12.2004 நேற்றுக் காலமானார். அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு சிவபாக்கியம் தம்பதிகளின் மகனும், தெய்வநாயகியின் அன்புக் கணவரும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

A.9வீதி,
156ஆம்கட்டை,
தொண்டமான்நகர்,
கிளிநொச்சி.

தகவல்
தெய்வநாயகி(தேவி),
(மனைவி)

(5453)

# துயர்பகிர்கின்றோம்

## திருமதி.இராசையா கமலம்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த பண்டாரவன்னி, கருவேலன் கண்டல் பிரிவுகளின் கிராம சேவை உத்தியோகத்தரான திரு.இ.பகீரதன் அவர்களின் தாயாரான திருமதி. இராசையா கமலம் அவர்கள் 13.12.2004 அன்று காலமாகிய செய்தி கேட்டு அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினரதும் உறவினர்களதும் துயரில் நாமும் பங்கு கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர்,
பணிமனை உத்தியோகத்தர்கள்,
கிராம உத்தியோகத்தர்கள்,
வெளிக்கள உத்தியோகத்தர்கள்,
பிரதேச செயலகம், ஒட்டுசுட்டான்.

(5407)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.